# இந்தியாவில்
# வேதமாணவர்களின் சரித்திரம்
# 1919 - 2005



# Bible Students History
# In India

# இந்தியாவில்
# வேதமாணவர்களின் சரித்திரம்

**1919 - 2005**

# Bible Students History
# In India

வெளியிட்டோர்:

வேதமாணவர் ஐக்கிய சபை,
17E , நாராயணசாமி லே அவுட்,
வடக்கு ரயில்வே லைன்,
இரத்தினபுரி,
கோயம்புத்தூர் – 641 028
போன் : 0422– 2332046,2492762.

இந்தியாவில் வேதமாணவர்களின் சரித்திரம் (தமிழில்) முதல் பதிப்பு
300 புத்தகங்கள் மே – 2006ல் வெளியிடப்பட்டது.

# நூல் மதிப்புரை



**Bro.S.CHINNAPPAN, Elder**
22, West -St,
Pothamettupatty,
Manaparai _ Post.
Trichy Dist - 621 306.

இந்திய வேதமாணவர்கள் வரலாற்று தொகுப்பை சகோ. O.S.R. கிறிஸ்துதாஸ் அவர்கள் செய்திருக்கிறார்கள். இதில் காணும் குறிப்புகள், நிகழ்ச்சிகள், நிழற்படங்கள், வெகு அருமையானவைகளாக இருக்கின்றன. யாரும் செய்யத் துணியாத அரிய செயலைச் செய்து அதில் அவர் வெற்றியும் கண்டிருக்கிறார். இந்திய வேதமாணவர்கள் வரலாறு என்ன? என்று கேட்போருக்கு சரியான பதிலாக இப்புத்தகம் அமைந்திருப்பது ஆச்சரியமானது. அளப்பரும் பணியை செய்து இந்நூலை வெளியிட்ட சகோ. O.S.R.கிறிஸ்துதாஸ் அவர்களை சகோதர அன்பில் உளமார பாராட்டி வாழ்த்துகிறேன். எல்லா நல்ல ஈவுகளுக்கும் ஊற்றும் காரணருமான யேகோவா தேவனின் நாமம் என்றென்றும் மகிமைப்படுவதாக.

இடம் : மணப்பாறை
நாள் : 20.2.2005

**(S.CHINNAPPAN)**

---



சகோ.V.ஜேக்கப்
99/ 186, இளங்கோ நகர்,
சித்தாபுதூர்,
கோயம்புத்தூர்– 641 044.
13.04.2005.

அன்பு சகோதரர் கிறிஸ்துதாஸ் அவர்கள் நமக்கு புதியவர் அல்லர். வேதமாணவ சபையின் அஸ்திவாரக்கற்களில் (ஒன்றான) ஒருவரான முன்னாள் சகோ.O.S. ரத்தினம் அவர்களது புதல்வராவார்கள். இவரது தந்தை மூலம் தான் நானும் எனது துணைவியாரும் கடந்த 06.03.1953 –ம் நாள் மேட்டுப்பாளையத்தில் நல்மனசாட்சியின் உடன் படிக்கை செய்து கொண்டோம். சகோதரர். O.S.R. கிறிஸ்துதாஸ் அவர்கள் அகில உலக வேதமாணவர் வரலாற்றில் இந்திய வேதமாணவர் இந்தியாவில் தோற்றுவித்த வரலாற்றை முறையாக கண்டறிந்து தனது உடல்நலம் பாராது செவ்வனே செய்து முடித்துள்ளார்கள். நம்மில் சிலரும் நமது வரலாறு அறியாதவரும் அறியும்படி இச்சரித்திர நூலை படைத்துள்ளார்கள். நான் மிகவும் பாராட்டுகிறேன். வாழ்த்துகின்றேன்.

பிதாவாகிய யேகோவா தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துமூலம் இவரை ஆசீர்வதிப்பாராக.

**சகோ.V. ஜேக்கப்**
வேதமாணவர் சபை திருமணப்பதிவாளர்,
கோவை சபை மூப்பர்.

**Bro J.UDHAYAKUMAR,**ELDER, BSA.
4/2 RANGAPPA STREET,
AYANAVARAM,
CHENNAI - 600 023.



**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே !**

இந்தியாவில் வேதமாணவர்கள் ஐக்கிய சபையானது எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பது முதல், இன்று வரை உள்ள அனைத்து விபரங்களையும் **"BIBLE STUDENTS HISTORY IN INDIA"** என்ற தலைப்பில் தொகுத்து, மதுரை சகோ.O.S.R.கிறிஸ்துதாஸ் அவர்கள் வெளியிட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

1919–ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் தேடிப் பிடித்து, விட்டுப்போன செய்திகளைச் சேர்க்க திருச்சி, கோவை, சென்னை, பெங்களூர், மைசூர், ஊட்டி என பல ஊர்களுக்கும் பயணம் செய்து, கிடைப்பதற்கு மிகவும் அரிதான பல புகைப்படங்களை, அவைகள் எங்கு கிடைக்கும் என ஊடுருவி தேடிக் கண்டுபிடித்து, இந்த அருமையான புத்தகத்தை நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஆதி முதல் நடந்த பொதுமாநாடுகள், சுவிசேஷ வேலைகள், ஞானஸ்நானங்கள், மரணங்கள், திருமணங்கள், மாதப்பத்திரிக்கை, வெளிநாட்டு சகோதரர்களின் வருகை, விசேஷமாய் வேதமாணவர்கள் என்கிற சுடர்விடும் மாபெரும் இயக்கத்தை ஆரம்பித்த சகோதரர். சார்லஸ் டாஸ் ரஸல் அவர்களைப் பற்றிய விபரங்கள் அனைத்தையும் தேனில் தோய்த்தெடுத்துத் தருவது போல் நமக்கு தந்திருக்கிறார்கள்.

இவை அனைத்துமே தனிப்பட்ட O.S.R.கிறிஸ்துதாஸ் என்ற சோர்ந்து போகாத ஒரு மதுரை எறும்பின் அயராத வேலையின் அளவற்ற சொத்து என்றால் அது மிகையாகாது. எல்லா முயற்சிகளிலும் உள்ளது போலவே, அநேகத் தடைகள், இடர்பாடுகள், ஏளனங்கள், சோர்வுண்டாக்கும் செயல்கள் இவைகள் அனைத்தையும், மரண வாசல் வரை சென்றுவிட்டு, தேவனால் திருப்பியனுப்பப்பட்டு, வெற்றியுடன் செய்து முடிக்க தேவன் கிருபை செய்திருக்கிறார்.

எப்படி? என்ற கேள்வி மனதில் ஒலிக்கிறது. நியா : 2 : 16 ல் "தேவன் நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார்" என்று வாசிப்பது போல; தேவன், இனிய குரலையும், வயலின் கம்பிகளுக்குள் உறங்கிக் கிடக்கும், உள்ளம் தொடும் இசையை ஒலிக்கச் செய்ய அருமையான விரல்களையும், 86 ஆண்டுகள் இந்திய மண்ணில் தூவப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட அறுப்பின் மணிகளை களஞ்சியத்தில் சேர்க்கும் வேலைக்கும், கிறிஸ்துதாஸ் அவர்களை எழும்பப் பண்ணினார் என்றே சொல்லலாம்.

இந்த ஒய்வுபெற்ற மனிதனின் ஒய்வு பெறாத வேலை உற்சாகத்தையும், உள்ளப் பூரிப்பையும் தருகிறது. நன்றாய் சுவைத்துப் பாருங்கள். அருமையான புத்தகத்தை அரியவிபரங்களை, உரியவர் மூலம் வழங்கிய தேவாதி தேவனுக்கும், நம்முடைய இரட்சகருக்கும், மேலான துதியையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறோம்.

அன்புடன்
சத்தியம் சுமக்கும் கழுதை

**சகோ.D.தானியேல்**
முன்னாள் பொதுக்காரியதரிசி
வேதமாணவர் சபை.
10. தாமரை நகர்,
கே.பாளையம்
கோயம்புத்தூர் – 641 030.



அன்பான சகோ. O.S.R. கிறிஸ்டி அவர்களுக்கு,

வேதமாணவ சபையின் பூர்வீகத்தைப்பற்றியும், இது இந்நாள் வரை வளர்க்கப்பாடுபட்ட சகோதரர்களைப்பற்றியும் தாங்கள் தொடர்ந்து மிகப்பிரயாசையுடன் எடுத்து எழுதியுள்ளது பாராட்டத்தக்கது.

பல இன்னல்களுக்கிடையே தேவன் தங்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்தருளி இந்த அரிய காரியத்தை முடிக்கச் செய்ததற்காக அவருக்கு ஸ்தோத்திரம். தொடர்ந்து அவரது இராஜ்யத்தின் ஊழியத்தை செய்ய தங்களுக்கு சரீர சுகத்தையும் பெலத்தையும் தந்தருளுவாராக. தேவ சமாதானம் உங்களோடிருப்பதாக.

D.**தானியேல்**

---

**Bro. S.T. Balusamy**
Elder, Bible Students Association,
Nethaji Road,
Erode.



இந்திய வேதமாணவ சங்க ஊழிய வரலாற்றினை எனது மைத்துனர். திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் எழுதியுள்ளார்கள். இதனை நான் முழுவதும் படித்துப் பார்த்தேன். கிறிஸ்தவ உலகில் சத்தியத்தை எவ்வாறு அறிந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டிய அந்நாள் ஊழியக் காரர்களிலிருந்து இந்நாள் ஊழியக்காரர்கள் வரை அவர்கள் செய்த பணியினை மிகச்சிறப்பாக விவரித்துள்ளார்கள். இந்நூலை படிக்கும் கிறிஸ்தவ அன்பர்களுக்கு இந்த சத்தியம் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை விளக்கும் கண்ணாடியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவரது சீரிய இப்பணிக்கு என் வாழ்த்துக்கள்.


இடம் : ஈரோடு
நாள் : 12.03. 2005.

கிறிஸ்துவுக்குள் அன்பான,

S.T. Balusamy

(S.T.Balusamy)

**Bro. R. செல்வராஜ்**
திருவொற்றியூர் கிளைச்சபை மூப்பர்
F.1. ஹாரிசான் அபார்ட்மெண்ட்
1030, T.H. ரோடு, காலாடிபேட்டை
சென்னை–600 019.



சகோ. C.T. ரஸல் என்பவர் வேதமாணவ சபையை அமெரிக்காவில் ஆரம்பித்தார். இந்தியாவில் சகோ.S.P. தேவசகாயம் (S.P.Davey) என்பவர் 1919–ல் நாகர்கோயிலில் ஆரம்பித்தார். அது முதல் 2005 வரை உள்ள இந்திய சபையின் சரித்திரத்தை சகோ.O.S.R.கிறிஸ்துதாஸ் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு சபையின் எல்லா மாதப் பத்திரிக்கைகளையும் சேகரித்து தொகுத்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே மிகப்பெரிய சாதனை. இதுவரை யாரும் செய்யாத இந்த வேலையை இந்த வயதிலும் உடல்நலக் குறைவையும் பாராது செய்திருக்கிறார்கள். இது உண்மையிலேயே தேவ ஆவி கொடுத்த உற்சாகம் தான். அவர் வியாதிப்பட்டிருக்கும் போது அவரை நான் பார்க்கச் சென்ற போது, **"நீங்கள் கவலைப்படாதீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை அதாவது சபையின் சரித்திரத்தை எழுத வேண்டிய வேலை இன்னும் பாக்கி இருக்கிறது. ஆகையால் தேவன் உங்களுக்கு இன்னும் ஆயுளைக் கூட்டுவார்"** என்று கூறினேன். அது போலவே தேவன் கிருபை செய்திருக்கிறார். இந்த புத்தகத்தில் அவர் ஒவ்வொரு ஆண்டிலும் மாநாடு நடந்த இடம், ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள், மாநாட்டில் கொடுக்கப்பட்ட செய்திகள், எத்தனை பேர் கூடினார்கள், ஊழியங்கள் நடைபெற்ற விதம் ஆகியவைகளைப் பற்றிய விபரங்களைக் கொடுத்திருக்கிறார்.

நமது மூத்த சகோதரர்கள் எந்த அளவுக்கு கஷ்டப்பட்டு சபையை வளர்த்திருக்கிறார்கள் என்று அறிய இந்த புத்தகம் மிகவும் உதவுகிறது. நாமும் இதை உணர்ந்து, தொடர்ந்து ஊழியம் செய்து சபையை வளர்க்க தேவன் கிருபை செய்வாராக.

கிறிஸ்துவுக்குள் ஊழியன்,
சகோ. R. செல்வராஜ்.
சென்னை – 600 019.

**சகோ. எபிமனோகரன்,**
**பொதுக்காரியதரிசி,**
**வேதமாணவர் ஐக்கிய சபை,**
**கோவை,**



## வாழ்த்துரை


இன்றைய செய்தியே நாளைய வரலாறு ஆகும். ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆரம்பம் உண்டு. பிரசங்கியில் வாசிக்கின்ற வண்ணமாக ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு. அதுபோல நாம் தற்போது அங்கம் வகிக்கின்ற வேதமாணவ ஐக்கிய சபைக்கும் ஒரு வரலாறு உண்டு. ஆனால் இன்றைய நாளில் சபையின் வரலாறு அறிந்தவர்கள் ஒரு சிலர் ஆவர். அறிந்தவர்களும் முழுமையாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை, ஆகையால் வேதமாணவ ஐக்கிய சபை 1919ம் ஆண்டு ஆரம்ப கால முதல் இன்றைய நாள் வரை எவ்வாறு செயல்பட்டு வருகிறது என்பதை நமது சகோதரர் O.S.R.கிறிஸ்துதாஸ் அவர்கள் முழு முயற்சியுடன் பல்லாண்டுகால மாதப்பத்திரிகையினைச் சேகரித்து அதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

அவரது முயற்சியையும், ஆர்வத்தையும் பாராட்டுகிறேன்,வாழ்த்துகிறேன். அவரது பணி தொடரட்டும். பிதாவாகிய எகோவா தேவன் தாமே தமது குமாரன் மூலம் ஆசீர்வதிப்பாராக.

**கோவை**
**03–07–2005**

சகோ. J. எபிமனோகர்

# ஆசிரியர் முன்னுரை



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு யேகோவா தேவனின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**"வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே"** (யோவா 5: 39) என்று வாசிக்கும் நாம், சத்தியத்தை அறிய வேண்டிய முறையில் அறிந்து மற்ற கிறிஸ்தவர்களைப் போலன்றி "சத்தியத்தை அறியுங்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற வசனத்தின் வழி நின்று, நித்திய ஜீவனை அடைய பிதாவாகிய தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்துவை குருவாகக் கொண்டு, **"வேதமாணவராக"** சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கிறவர்களாக நமது ஒட்டத்தை ஓடுகிறோம். இந்த வேதமாணவரின் ஒளி நமக்கு எப்படி கிடைத்தது என்றும் நாம் நடந்த வழி எப்படி என்றும் கடந்த 1919–ம் ஆண்டு முதல் 2005–ம் ஆண்டு வரை வேதமாணவர்கள் வளர்ச்சியடைந்துள்ளதை **"இந்தியாவில் வேதமாணவர்களின் சரித்திரம்"** ("Bible Students History in India") என்ற இந்த புத்தக வாயிலாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மறைந்த எனது தந்தை O.S. ரத்தினம் அவர்கள் 1964ம் ஆண்டு வரை தனது காலத்தில் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருந்த வேதமாணவர் மாதப்பத்திரிக்கைகளையும், தற்காலத்திலுள்ள வேதமாணவர் சபை மாதப்பத்திரிக்கைகளையும் ஒழுங்கு செய்து அவைகளிலுள்ள முக்கிய செய்திகளை இப்புத்தகத்தில் தொகுத்துள்ளேன். ஒரு சில புத்தகங்கள் என் வசம் இல்லாத நிலையில் இதற்கு உதவி செய்த திருச்சி பகளவாடி சகோதரர். அருள்சாமி அவர்களுக்கும், சென்னை சகோதரர். J. உதயக்குமார் அவர்களுக்கும், பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களை கொடுத்து உதவிய பெங்களூர் சகோதரர். அலெக்சாண்டர் அவர்களுக்கும், திருச்சி சகோதரர். A.ஜோசப் அவர்களுக்கும், பொதுப்பொருளாளர் சகோதரர்.S.A.டேவிட் அவர்களுக்கும் இப்புத்தக நகலை சரிபார்த்துக் கொடுத்த மதுரை சகோதரர்.C.டைட்டஸ் அவர்களுக்கும், சென்னை சபை மூப்பர் சகோதரர்.R. செல்வராஜ் அவர்களுக்கும், பொதுக்காரியதரிசி சகோதரர்.J.எபிமனோகரன் அவர்களுக்கும், எனது நன்றியை முதலாவது தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்தின் மூலம் இந்தியாவில் வேதமாணவர்களின் வளர்ச்சியை அறிந்து கொள்ள முடியும்.

## இந்த சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ள முக்கிய செய்திகள்

1. "Bible Students". வேதமாணவர் என்ற சபை உருவாவதற்கு காரணமாயிருந்த மறைந்த சகோ,பாஸ்டர் ரஸல் அவர்களது வாழ்க்கை வரலாறு.
2. இந்தியாவில் வேதமாணவர் சபை உருவாகக் காரணமாயிருந்தவர்கள்.
3. வேதமாணவர் சபையின் ஆரம்பநிலை.
4. தேவ ஊழியங்கள் செய்த மூத்த சகோதரர்கள்.
5. வேதமாணவர்கள் நடத்திய மாநாடுகள் பற்றிய விபரம்.

6. மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் பற்றிய விபரம.

7. மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட தேவ செய்திகள்.

8. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.

9. பொதுசபை நிர்வாகிகள், அவர்களது ஊழியங்கள்.

10. வேதமாணவர் சபை பொதுவரவு, செலவு விபரங்கள்.

11. ஞானஸ்நான உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்.

12. நித்திரை அறிவிப்பு.

13. வேதமாணவர் கிளைச் சபைகளில் நடத்தப்பட்ட ஒரு நாள் மாநாடு, ஞானஸ்நான ஆராதனை, சிறப்பு ஆராதனை, வாலிபர்களுக்கான கருத்தரங்குகள்.

14. வேதமாணவர் சபை மாதப்பத்திரிக்கையில் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ள தேவசெய்திகள்.

15. தற்கால வேதமாணவர்களின் ஊழியங்கள் .

16. பல முக்கிய புகைப்படங்கள்.

மேலும் அநேக செய்திகளை இப்புத்தகத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இப்புத்தகம் வெளியிட உதவியாக இருந்த அனைத்து சகோதரர்களுக்கும், இப்புத்தகத்தை படித்து பாராட்டி வாழ்த்துதெரிவித்த சகோதரர்களுக்கும், மேல் நாட்டு சகோதரர். குவின்ஸ்லி தம்பதியாருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாவற்றையும் அதனதன் காலத்தில் செய்கின்ற யெகோவா தேவனுக்கு அவரது அருமை குமாரனும் நமது இரட்சகரும் கன்மலையுமான கிறிஸ்து இயேசுவின் மூலமாக நன்றியறிதலான ஸ்தோத்திரத்தை செலுத்துகிறேன்.

முகவரி :

**Bro. R. Christ Dass**
"Peace Cottage"
7-971, Melakuilkudi Road,
Nagamalai - West
Madurai - 625 019.
Phone: 0452-2458711
Cell: 93451 96175

கிறிஸ்துவுக்குள் அன்பான
உங்கள் சகோதரன்,
**O.S.R. கிறிஸ்துதாஸ்,**
மூப்பர். தேவமாணவர் சபை. மதுரை கிளை

# The Author's Foreword

Dear brethren in Christ,

Greetings in the name of our God Jehovah. .

As the Bible says, **"Ye search the scriptures, because ye think that in them ye have eternal life; and these are they which bear witness of me" and "ye shall know the turth, and the truth shall make you free," (John 5:39; 8:32)** learning the Truth properly, being in the way of it, we, the bible students, are running in the race through our Priest Christ by the grace of our heavenly Father. I am very glad to publish this book, **Bible Students' History In India**. It explains how the truth of the Bible students came to India, how the Bible Students movement started in 1919 and developed up to 2005.

My father late Br. O.S. Rathinam, senior Bible Student, Madurai had collected the monthly magazines of the Bible students from 1919 to 1964. From that period I have collected the remaining magazines upto 2005 and compiled the important messages from them. I thank Br. Arulsamy of Pagalavadi, Trichy and Br. J. Udayakumar of Chennai for helping by searching and giving some missing magazines. I also thank Br. Alexander of Bangalore, Br. A. Joseph of Trichy and Br. S.A. David of Coimbatore for helping by giving some very old photographs. And also I thank Br. C. Titus, Madurai, Br. R.Selvaraj, Elder, Chennai and Br. J. Ebemanohar, G.S. Coimbatore for helping by editing and proof reading this book.

**Important messages given in this book**

- The biography of Pastor C.T. Russel, the founder of Bible Students.
- Founders of Bible students in India.
- Beginning stage of Bible Students.
- Details about the senior brethren who have worked.
- Details about the conventions.
- Details about the brethren who have attended conventions.
- Messages given in the conventions.
- Important decisions taken in the conventions.
- Office bearers and their labours.
- Accounts details.
- Details about the members who have consecrated.
- Obituaries.
- Details about the one day conventions, Baptismal prayers, special prayers and youth conventions.
- The works of the present Bible Students.
- Important photographs, etc.

I Thank all the brethren who have helped for publishing this book and also I thank the brethren who have given their valuable comments and wishes. Above all I thank the God, Jehovah through our Lord Jesus Christ.

Your brother in Christ,

**O.S.R. Christdass,**
Elder, Madurai Branch.

# பொருளடக்கம்


1. வேதமாணவர் சபை ஸ்தாபகர்
பாஸ்டர் ரஸல் அவர்களது வாழ்க்கை வரலாறு. ..... 1

2. சத்தியம் இந்தியாவுக்கு வந்த வரலாறு. ..... 4

3. வேதமாணவர்கள். ..... 8

4. தேவ ஊழியத்தில் வேதமாணவர்கள். ..... 10

5. 1919 ஆம் ஆண்டு முதல் 2005 வரை
பொது மாநாடு நடத்தப்பட்ட இடங்கள். ..... 13


6. வேதமாணவர்களின் விசுவாசம். ..... 15

7. 1919 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டு வரை
இந்திய வேதமாணவர்களின் ஊழியங்கள். ..... 16

8. பொது மாநாடு, கிளைச்சபை மாநாடுகளின் புகைப்படங்கள் ..... 177

9. வேதபுத்தகங்களை (66 Books) எழுதியவர்கள்,
எழுதப்பட்ட இடம், எழுதப்பட்ட காலம். ..... 187

10. முடிவுரை. ..... 189



# வேதமாணர் சபை ஸ்தாபகர்
# பாஸ்டர் சார்லஸ் டாஸ் ரஸல்

தேவனுடைய மெய் சத்தியத்தை கடைசி காலத்திலே உலகிற்கு அறிவிக்க தேவன் தெரிந்து கொண்ட பாத்திரம் சார்லஸ் டாஸ் ரஸல் ஆகும், இவர் பாஸ்டர் ரஸல் என்றும், நூலாசிரியர் என்றும், போதகர் என்றும், கவிசேஷ ஊழியக்காரர் என்றும் உலகில் அறியப்பட்டவர், இவர்தான் வேதமாணவர் சபையை அமெரிக்காவில் ஸ்தாபித்து உலகெங்கிலும் பரப்பினவர்.

இவர் அமெரிக்காவில், பிட்ஸ்பர்க் என்ற இடத்தில் 1852–ஆம் ஆண்டு, பிப்ரவரி 16 ஆம் நாள் ஜோசப், எலிசா என்ற தம்பதியருக்கு இரண்டாவது மகனாக பிறந்தார். அவர் பெற்றோர்கள் இருவரும் ஐரிஸ் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்கள், அவரது தந்தை ஒரு பெரிய வியாபாரி.

இவர் 1879ல் மரிய பிரான்சிஸ் ஆக்லே என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார், அவர்களுக்கு குழந்தையில்லை, பத்திரிக்கையை நிர்வகிப்பதில் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பதினேழு ஆண்டுகளுக்கு பிறகு பிரிந்துவிட்டனர்.

**வேதத்தில் ஆர்வம் :**

ரஸல் தனது 15 வயது வரை, மற்ற பேர் கிறிஸ்தவர்களைப் போலவே கொஞ்ச பேர் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் மற்றவர்கள் நித்திய ஆக்கினை அடைவார்கள் என்று போதிக்கப்பட்டிருந்தார். இவர் தனது 16ஆவது வயதில் தன்னை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்து கொண்டு காங்கிரிகேஷனல் (**Congregational church**) சபையிலும், **Y.M.C.A**. விலும், ஒரு உறுப்பினரானார். அங்கு தனக்கு விளங்காத அநேக கேள்விகளைக் கேட்கும் போது அவைகளுக்குப் பதில் கிடைக்கவில்லை. உள்ளத்தில் உள்ள பழைய கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டு வேதத்தை ஆராய்ந்தார். வேத பண்டிதர்கள் அறிந்திராத அனேக காரியங்களை இவர் வேத ஆராய்ச்சி மூலம் அறிந்து தேவனுடைய தெய்வீக திட்டத்தையும் அதன் மகிமையையும் உணர்ந்தார்.

1870–ஆம் ஆண்டில் ரஸல் சிலருடன் சேர்ந்து ஒரு வேத வகுப்பை ஆரம்பித்தார். மிக ஆழமாகவும், கவனமாகவும் சத்தியத்தை ஆராய்ந்து வேதமாணவர்களுக்கு இவர் போதிக்க ஆரம்பித்தார். அப்பொழுது இவரை பாஸ்டர் என்று அழைக்க ஆரம்பித்தனர். அந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் அவர் வேதமாணவர்களுக்கு மூப்பராக தெரிந்தெடுக்கப்பட்டார், அது முதல் அவரது மரணம் வரை (1916 அக்டோபர் வரை) அவர் மூப்பராகவே இருந்து மரித்தார்.

**பாஸ்டர் ரஸல் எடுத்த முக்கிய முடிவு :**

தனது 21 வயதில் 2,5 லட்சம் டாலர் சொத்துடையவராக இருந்தார். அவரது வியாபாரம் அவரது வேத ஆராய்ச்சிக்கு இடையூராக இருந்தது. 1876ல், தனது 24வது வயதில் வேத ஆராய்ச்சி மூலம் 1874 தான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம் என்ற காலதீர்க்கத்தரிசனத்தையும், அறுப்பின் வேலை செய்யப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தார். அப்பொழுது தனது நேரத்தை முற்றிலும் வேத ஆராய்ச்சியில் செலவிட முடிவு செய்தார். எனவே 1877 ல் கீழ்க்கண்ட சில முக்கிய முடிவுகளைமேற்கொண்டார்.

1. சத்தியத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும்.
2. தனது சொத்தாகிய 3.5 லட்சம் டாலரை ஊழியத்திற்கு பயன்படுத்த வேண்டும்,
3. எந்த கூட்டத்திலும் பணம் வாங்கக்கூடாது.
4. தனது சொந்த பணம் தீர்ந்த பிறகு, தானாக முன் வந்து தருகிற காணிக்கையை மட்டும் பெற்றுக்கொள்வது.

**சீயோன் காவற்கோபுரம் பத்திரிக்கை:**

நியூயார்க்கிலுள்ள ரோசெஸ்டரிலிருந்து " விடியலை அறிவிப்பவன்" (THE HERALD OF THE MORNING) என்ற பத்திரிக்கையை நடத்தி வந்த திரு. என்.எச். பார்பர் (N.H. BARBOUR) என்பவருடன் பாஸ்டர் ரஸலுக்கு 1876ல் தொடர்பு கிடைத்தது. அந்த பத்திரிக்கை வெளிவர பாஸ்டர் ரஸல் பொருளுதவி செய்தார். அதில் வேதாகம பாடத்தை எழுதியும் போதித்தும் அப்பத்திரிக்கையின் உதவி ஆசிரியரானார். 1878 ஆம் ஆண்டில் திரு.என்.எச். பார்பர் அவர்கள் இயேசுவின் ஈடுபலி மரணத்தைக் குறித்து தவறான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதே பத்திரிக்கையில் பாஸ்டர் ரஸல் அவர்கள் மிக முக்கிய தேவ திட்டத்தை விளக்கி, தனக்கும் பார்பருக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளை எழுதியிருந்தார்.

இதுவே 1879 ஆம் ஆண்டு ஜூலை மாதம் " சீயோன் காவற்கோபுரம்" என்ற பத்திரிக்கையை பாஸ்டர் ரஸல் ஆரம்பிப்பதற்கு காரணமாயிற்று. இது மாதம் இருமுறை (SEMI MONTHLY) 32 பக்கங்களில் வெளி வந்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பிரசன்னம் 1874ல் வந்துவிட்டது என்று இவ்வுலகிற்கு அறிவித்த முதல் பத்திரிக்கை இதுவேயாகும். அதற்கு வேண்டிய வேத ஆதாரங்களையும் அது எடுத்துக் காண்பித்தது. (1879 ஜூலை முதல் 1916 வரை வெளிவந்த சீயோன் காவற்கோபுரம் பத்திரிக்கையின் தொகுப்பைத்தான் நாம் **"ரீபிரின்ட்ஸ்" REPRINTS** என்று கூறுகிறோம்.)

மேலும் அவர் **BIBLE STUDENTS' MONTHLY** என்ற பத்திரிக்கையை 35 மொழிகளில் பிரசுரித்து உலகெங்கிலுமுள்ள வேதமாணவர்களுக்கு அனுப்பி வந்தார், **THE PEOPLE'S PULPIT, EVERYBODY'S PAPER** போன்ற பத்திரிக்கைகளையும் பிரசுரித்து விநியோகித்து வந்தார்.

**பாஸ்டர் ரஸல் எழுதிய புத்தகங்கள்**

1916 வரை பாஸ்டர் ரசல் எழுதிய புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1881 | கிறிஸ்தவர்களுக்கு நல்ல உணவு, | **FOOD FOR THINKING CHRISTIANS.** |
| 1881 | ஆசரிப்புக் கூடார நிழல், | **TABERNACLE SHADOW.** |
| 1886 | யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு, | **THE DIVINE PLAN OF THE AGES.** |
| 1889 | காலம் சமீபமாயிருக்கிறது , | **THE TIME IS AT HAND.** |
| 1891 | உமது ராஜ்யம் வருவதாக, | **THY KINGDOM COME.** |
| 1897 | அர்மெகதோன் யுத்தம், | **THE BATTLE OF ARMAGEDDON.** |
| 1899 | ஒப்புரவாகுதல், | **THE AT-ONE-MENT BETWEEN GOD AND MAN.** |
| 1904 | புதிய சிருஷ்டிகள் | **NEW CREATION.** |

சிறு புத்தகங்கள்

நரகத்தைப்பற்றி வேதம் கூறுகிறது என்ன?
ஆவியுலக கோட்பாடு பற்றி வேதம் கூறுகிறது என்ன?
கர்த்தரின் 2–ஆம் வருகையின் விதமும் நோக்கமும்.
பரிணாம கொள்கையும் வேதமும்.
ராபர்ட் இங்கர்சால் என்பவருக்கு பதில்.
சிருஷ்டிப்பு பற்றி படவிளக்கம்.

**இவரது ஊழியங்கள்**

அவர் 42 ஆண்டுகள் தேவ ஊழியத்தில் ஈடுபட்டார். இரவும் பகலும் வாரத்தில் ஏழு நாட்களும் உழைத்தார், தேவ ஊழியத்தினிமித்தம் அவர் 10 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறார். 30,000 பிரசங்கங்கள் செய்திருக்கிறார். பெரும்பாலான பொதுக்கூட்டங்களில் 3 மணி நேர பேசுவார். அவர் எழுதிய புத்தகங்களின் மொத்தப்பக்கங்கள் 50,000 ஆகும். அவர்

எழுதிய புத்தக பட்டியலில் தடித்த எழுத்துக்களில் போடப்பட்டுள்ள புத்தகங்கள் அனைத்தும் வேதாகம பாடங்கள் (STUDIES IN SCRIPTURES) என்பவைகளாகும். அவைகள் 19 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. போலிஷ், ஜெர்மன், பிரஞ்ச், ஸ்வீடிஷ், டச்சு, லிதுவேனியன், கிரேக்கு, ஹங்கேரியன், ருமேனியன், ஷ்பேனிஷ், உக்கரைன் மற்றும் இந்திய மொழிகள் தமிழ், மளையாளம், கன்னடம் ஆகியவை அவைகளில் சில மொழிகளாகும்.

சீயோன் காவற்கோபுரம் என்ற பத்திரிக்கை வருடத்திற்கு 5000 பிரதிகள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டன. BIBLE STUDENTS' MONTHLY என்ற அவரது பத்திரிக்கை வருடத்திற்கு 5 கோடி (50,000,000 – 50 மில்லியன்) பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. 15,000,000 வாசகர்கள் வாரந்தோறும் அவரது தேவ செய்திகளை படித்து வந்தனர். 4000 – செய்தித்தாள்கள் அவரது பிரசங்கங்களை வெளியிட்டன. இவருக்கு வருடத்திற்கு 400,000 கடிதங்கள் வந்தன. இவர் வருடத்திற்கு 5 முதல் 40 மாநாடுகள் நடத்தி வந்தார். இதில் கலந்து கொண்டவர்கள் 300 முதல் 5000 பேர் ஆகும். இவரை 1200 சபைகள் தங்களது பாஸ்டராக தேர்வு செய்து கொண்டன. இவர் மத். 24: 45–47ல் சொல்லப்பட்ட உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் என்றும், ஏழாவது சபையாகிய லவோதிக்கேயா (வெளி. 3:14) சபையின் தூதனென்றும் அறியப்பட்டவர். இவர் 70 பேர் கொண்ட ஒரு போதகர் குழுவை நியமித்து அவர்களை முழு நேர ஊழியத்திற்கும், பிரயாண ஊழியத்திற்கும் பயன்படுத்தினார். அதுவுமல்லாமல் 700 பகுதி நேர ஊழியக்காரரையும் நியமித்து, அவர்களையும் பயன்படுத்தி வந்தார்.

அவர் தன்னை பெரிய ஆளாகவோ, பிரத்தியேக சக்தி படைத்தவராகவோ, அதிகாரம் படைத்தவராகவோ தன்னை உயர்த்திக் காண்பித்துக் கொள்ளவில்லை. தன்னை உண்மையுள்ள ஒரு வேதமாணவனாகவே காண்பித்துக்கொண்டார். புதிய மதத்தை அவர் நிறுவவில்லை, அப்போஸ்தலர் போதித்ததையே 20 ஆம் நூற்றாண்டில் வேத ஆதாரங்களைக்கொண்டு போதித்தார்.

**பாஸ்டர் ரஸல் அவர்களின் உலக சுற்றுப்பயணம்**

பாஸ்டர் ரஸல் அவர்கள் அமெரிக்க நாட்டிலிருந்து INTERNATIONAL BIBLE SUTDENTS ASSOCIATION MISSIONARY INVESTIGATING COMMITTEE மூலம் கிழக்கத்திய நாடுகளுக்கு உலக சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார். இவரது சுற்றுப் பயண தூரம் சுமார் 30,000 மைல்கள் ஆகும்.

அவர் 1911–ம் ஆண்டு டிசம்பர் 4–ஆம் நாள் பிரயாணத்தை ஆரம்பித்தார். டிசம்பர் 19 வரை அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு டிசம்பர் 31–ஆம் நாள் ஜப்பான் சென்றடைந்தார். பிறகு சீனா, மணிலா, பினாங்கு, பிலிப்பைன்ஸ், சிலோன், இந்தியா, அரேபியா, எகிப்து, கிரேக்கு, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு பிரயாணம் செய்து தேவ செய்தி அளித்தார். சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு 1912–ம் ஆண்டு மார்ச் 28–ஆம் நாள் அமெரிக்கா சென்றடைந்தார்.

**இந்திய பிரயாணம்**

1912–ஆம் ஆண்டு பிப்ரவரி 7–ஆம் நாள் இந்தியாவில் ரசல்புரம், நெய்யாத்தங்கரா, திருவாங்கூர் (திருவனந்தபுரம்) ஆகிய இடங்களுக்குச் சென்று தேவ செய்தியளித்தார். அப்போது நாகர்கோயிலைச் சேர்ந்த சகோ. S.P. டேவி என்ற தேவசகாயம் அவர்களைச் சந்தித்து அவர் ஏற்பாடு செய்தபடி முதலாவது கொழும்பு (இலங்கை) சென்று அங்கிருந்து மறுபடியும் (இந்தியா) தூத்துக்குடி நகரத்திற்கு வந்து சேர்ந்தார். தாங்கள் கொண்டு வந்திருந்த கார் மூலமாக கொல்லம், கோட்டயம், அரவங்காடு, கொட்டாரக்கரா, திருவனந்தபுரம், ஆகிய இடங்களுக்குச் சென்று தேவ ராஜ்யத்தைக் குறித்த செய்திகளை அறிவித்தார். பாஸ்டர் ரஸல் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதை சகோ.S.P.டேவி அவர்கள் மொழி பெயர்த்துக் கூறினார்கள். சகோ. ரஸல் அவர்களது இந்தியப் பயணத்தின் போது சகோ.S.P.டேவி அவர்களும் அவரது உதவியாளர்களும் பெரும்பணியாற்றியுள்ளார்கள். அதன் பின்னர், அங்கிருந்து இரயில் மூலம் சென்னை சென்று அங்கு ST.THOMAS MOUNT மற்றும் Y.M.C.A ஆகிய இடங்களில் தேவ ராஜ்யத்தைக் குறித்த



## PASTOR C.T. RUSSEL IN INDIA 1912

செய்திகளை அறிவித்தார். அதன் பிறகு விசாகப்பட்டினம், கல்கத்தா, ஆக்ரா, பனாரஸ், பம்பாய் முதலிய இடங்களுக்குச் சென்று தேவ ராஜ்ய செய்திகளை கொடுத்துவிட்டு 1912–ம் ஆண்டு பிப்ரவரி 25–ஆம் நாள் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார்.

பாஸ்டர் ரஸல் அவர்களது இந்தியப் பயணம்தான் வேதமாணவர் சபை இந்தியாவில் உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்தது எனலாம்.

**பாஸ்டர். ரஸல் அவர்களின் நித்திரை:**

பாஸ்டர் ரஸல் புரூக்லினிலுள்ள பெத்தேலை விட்டு 1916, அக். 16–ஆம் நாள் மாலை 6 மணிக்கு புறப்பட்டு மேற்கு, தென்மேற்கு பகுதிகளுக்கு ஊழியத்திற்கு சென்றார். உடல் நலக்குறைவால் திட்டமிட்ட நாளுக்கு முன்னதாகவே திரும்ப வேண்டியதாயிற்று, கடைசியாக லாஸ் ஏஞ்சலில் தேவ செய்தி கொடுத்துவிட்டு, இரயிலில் திரும்பும்போது டெக்ஸாஸில் உள்ள பம்பா என்ற இடத்தில் 1916 அக். 31 –ஆம் நாள் மதியம் 2.10க்கு நித்திரையடைந்தார். அவரது உடல் நவ. 4–ஆம் நாள் பெத்தேல் இல்லத்திற்கு வந்து சேர்ந்தது. நவ. 6 –ஆம் நாள் மதியம் 2.00 மணிக்கு பிட்ஸ்பர்க் (PITTSBURGH)–ல் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**நல்ல பயணம் செய்தார், போராடினார், வெற்றி கண்டார்.**

**THE GREATEST, GRANDEST, NOBLEST MAN THAT HAS WALKED THIS EARTH SINCE THE DAYS OF THE APOSTLE PAUL.**

# சத்தியம் இந்தியாவுக்கு வந்த வரலாறு

**எவர்களை முன் குறித்தாரோ அவர்களை**
**அழைத்துமிருக்கிறார்.**
**எவர்களை அழைத்தாரோ,அவர்களை**
**நீதிமான்களாக்கியுமிருக்கிறார்**
**எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை**
**மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.**

**(ரோம 8:31)**

சத்தியம் இந்தியாவில் விதைக்கப்பட தேவன் சித்தமானார். அதன் பொருட்டு ஊழியக்காரர்களை இந்தியாவிலேயே உருவாக்க தேவன் எண்ணங்கொண்டு கி.பி.1900–ம் ஆண்டு வாக்கில் நாகர்கோவிலுக்கு அருகில் உள்ள ஈத்தா மொழி என்னும் கிராமத்தில் வசித்த சகோ. S.P. டேவி அவர்களை தனது அனாதி தீர்மானத்தின்படி தேர்வு செய்தார். ஊழியத்திற்கு, இருவர் என்கிற முறைப்படி ஈத்தாமொழி கிராமத்துக்கு பக்கத்து கிராமமாகிய சொத்தவிளையில், சகோ.S.P.டேவிக்கு நண்பரான சகோ.J.சாமுயேல் என்பவர், தேவனின் பார்வையில் ஊழியத்திற்கு உரியவராகக் காணப்பட்டார். அவரையும் தமது தீர்மானத்தில் தேர்வு செய்ய முடிவு செய்திருந்தார்.

இந்த இரண்டு சகோதரர்களும் நாகர்கோவிலில், அப்பொழுது L.M.S கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இயற்கையிலேயே அதிக புத்திக்கூர்மையுள்ளவர்களாகவும், ஒவியம் வரைவதிலும், சிலம்பம், மல்யுத்தம் ஆகியவைகளிலும் சிறந்தவர்களாக விளங்கினார்கள்.

தேவதிட்டத்தின்படி காலம் நிறைவேறினபோது கி.பி.1904–ம் ஆண்டுவாக்கில் இவர்கள் மனதில் வேறு ஒரு எண்ணம் உதித்தது. அதாவது ஏதாவது தூரதேசம் சென்று, நிறைய பொருட்கள் சேர்த்து செல்வந்தர்களாக ஆக எண்ணினார்கள். அதன் பொருட்டு பெற்றோர்களுக்குத் தெரியாமல் இலங்கைக்கு இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். இதுவரை வெளியூர்களுக்குச் செல்லாத இவர்கள் இலங்கையை அடைந்து, கொழும்புவில் ஊரைச், சுற்றிப் பார்த்துவரும் பொழுது,ஒரு ஜனக்கூட்டத்தில் இவர்கள் அகப்பட்டு நெருக்கப்பட்டு,நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் தேடி காணாது களைத்துப்போய், வெவ்வேறு பாதையில் செல்ல ஆரம்பித்தனர். சகோ. J.சாமுயேல் தன் ஜீவனுக்காக மலைநாட்டில் உள்ள ஒரு எஸ்டேட்டில பணிபுரிய ஆரம்பித்தார்.

சகோ. S.P.டேவி, தன் நண்பனைக் காணாது மனம் நொந்து, கொழும்பு துறைமுகத்தில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் பொழுது,அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு , அங்கு வந்துள்ள ஒரு கப்பல் மாலுமியின் அறிமுகம் கிடைத்தது.

அவரிடம் நடந்த சம்பவங்களைப் பற்றிக் கூறவே அவரும் இரக்கப்பட்டு, அமெரிக்காவுக்கு வந்தால் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறினார். அக்காலத்தில் விஸா, பாஸ்போர்ட் விவகாரங்கள் கிடையாது. ஆகவே சகோ. S.P.டேவி சம்மதித்து அவர்களோடு கப்பலில் புறப்பட்டு அமெரிக்கா போய் சேர்ந்தார். தேவனின் வழி நடத்துதல் இருந்ததால், முன் கூட்டியே இவரை போஷிக்க, தேவ பக்தியுள்ள ஒரு குடும்பத்தை ஆயத்தப்படுத்தி , S.P.டேவி அவர்களை தேவன் அங்கு அடையச் செய்தார். அந்த குடும்பத் தலைவியும் தேவ ஏவுதலின்படி டேவி அவர்களைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, நன்கு பராமரித்ததோடு, கல்வியறிவைப் புகட்ட,ஒரு கல்லூரியில் சேர்த்து படிக்கச் செய்தார். டேவி அவர்களும் சிறப்பாக படித்து M.A. பட்டம் பெற்றார்.

பாஸ்டர் ரஸல் அவர்களின் ஊழியம் அமெரிக்காவில் வேரூன்றி சிறப்பாக நடந்து கொண்டிருந்த நேரம் அது. தேவனின் அனாதி தீர்மானத்தின்படி பாஸ்டர் ரஸல் அவர்களின் அலுவலகப் பணியாளராக சகோ.S.P.டேவி அவர்கள் பணிப் பொறுப்பேற்றார்.காலம் செல்லச்செல்ல பாஸ்டர் ரஸலின் வேதாகம போதகங்களும் , விளக்கங்களும் இவரை வெகுவாகக் கவர்ந்தது. தேவன் யார்? இயேசு கிறிஸ்து யார்? பரிசுத்த ஆவி என்றால் என்ன? ஆத்மா சாகாமை,

உயிர்த்தெழுதல் ஆகியவைகள் பற்றிய விபரங்களைத் தெளிவாக ரஸல் மூலம் தெரிந்து கொண்டார். இறுதியில் அவரோடு ஊழியப்பணியும் செய்யத் துவங்கினார். இவர் ஊழியத்தின் ஆர்வத்தைக் கண்ணுற்ற பாஸ்டர் ரஸல் அவர்கள் இவரையே இந்தியாவின் வேதமாணவ ஐக்கிய சங்கக் கொள்கையை பரப்பும் ஊழியராகத் தேர்வு செய்து இந்தியாவுக்கு திரும்ப கி.பி.1912ல் அனுப்பினார். இந்தியாவுக்கு திரும்பிய சகோ.S.P. டேவி தன் சொந்த கிராமத்துக்குச் சென்று தங்கினார்.

இது இப்படியிருக்க, இலங்கையில் தனித்து விடப்பட்ட சகோ. J.சாமுயேல் அவர்கள் சிறிது காலம் இலங்கையில் பணி புரிந்து விட்டு இந்தியாவுக்குத் திரும்பினார். அவர் திரும்பி வந்ததும் தாம் L.M.S சபையைச் சேர்ந்த ஒரு பள்ளியின் ஆசிரியராகப் பணியில் அமர்ந்தார். சில ஆண்டுகள் சென்ற பின், அவர் சார்ந்திருந்த L.M.S சபையில் கொள்கை சம்பந்தமான ஓர் பெரிய குழப்பம் ஏற்பட்டது. இதனால் அச்சபையை விட்டுப் பிரிந்து தன் சொந்த ஊரில் தன் சொந்த இடத்தில் கி.பி. 1906ல் ஓர் ஆலயத்தைக் கட்டி, மற்ற சபையோடு ஐக்கியப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டார். இவரை L.M.S சபையார் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் மீண்டும் ஒன்றாக இணையவில்லை. கிளைச்சபையாக செயல்படவும் வேண்டினார்கள். அதற்கும் உடன்படாமற் போகவே, தாம் பார்த்து வந்த ஆசிரியர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். இருப்பினும் மனந்தளராது சொந்தமாக தனியார் பள்ளி ஒன்றை ஏற்படுத்தி நடத்தினார். ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகியவைகளில் சிறந்த புலமை பெற்றவராதலால் சிறந்த ஆசிரியராக விளங்கினார். பள்ளியில் மாணவர்களும் அதிகம் வந்து சேர்ந்தனர்.

இவர் L.M.S சபையைவிட்டு பிரிந்திருந்த போதிலும் இவருக்கு சத்தியத்தை பற்றிய அறிவு அவ்வளவாகக் கிடையாது. பழைய புளித்தமாவையே அரைத்துக் கொண்டிருந்தார். இருப்பினும் இவர் புதியதாக ஆரம்பித்த சபையில் அநேக உறுப்பினார்கள் வந்து சேர்ந்தார்கள்.

சகோ. J. சாமுயேலின் சொத்தவிளை கிராமத்துக்கு அருகில் கோட்டையடி என்னும் ஓர் கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் L.M.S சபையில் ஓர் பிரிவினை உண்டாகி, அதில் பிரபலமாக உள்ள சகோ.குமாரதாஸ் என்பவர், அதிலிருந்து பிரிந்து, தன் சொந்த இடத்திலேயே ஓர் ஆலயத்தைக்கட்டி, மற்ற சபையோடு ஐக்கியப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டார். அநேக குடும்பத்தார் இவரோடு ஐக்கியமானார்கள். அவர்களில் சகோ. புதுக்குணத்தான் என்பவரும் ஒருவர்.

சகோ. J.சாமுயேல், சகோ.D.குமாரதாஸ், சகோ. புதுக்குணத்தான் ஆகியவர்கள் நெருங்கிய உறவினர்களாகையால், ஒருமனப்பட்டு, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த காலக் கட்டத்தில், இந்தியா திரும்பிய சகோ. டேவி அவர்கள் தன் பழைய நண்பர் J.சாமுயேல் அவர்களை நினைவுகூர்ந்து அவர் இருப்பிடம் நோக்கிச் சென்றார். அங்கு ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஆனந்தகண்ணீர் வடித்துக் கொண்டார்கள். சகோ.சாமுயேல் தன் வர்த்தனமானத்தையும், சகோ. டேவி தான் அமெரிக்காவில் கண்டதையும் பாஸ்டர் ரஸலிடம் கேட்டு அறிந்த சத்தியங்களையும் சகோ. சாமுயேலிடம் கூறி விதையை விதைக்கலானார்.



**சகோ. S.P. டேவி அவர்களும் ஊழியக்காரர்களும்**

பாபிலோன் சபையிலிருந்து பிரிந்து தனியாக செயல்பட்ட சகோ. J.சாமுயேல் அவர்கள் ரஸலின் போதகம் குறித்து வெகு ஆர்வத்துடன் கேட்கலானார், ஆனால் சத்திய தர்க்கங்கள் வெகுநாட்களாக நடந்தது. பின்பு சத்தியம் முளைத்து, வேரூன்றி, அதிக மேனிகளை கொடுத்தது. இவைகள் தேவனின் செயல்திட்டமேயல்லாமல் வேறு என்னவென்று சொல்ல முடியும். இவர்களோடு சகோ. D.குமாரதாசும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டார்.

சொத்தவிளையிலும், கோட்டையடியிலும் கூடி அநேக ஆராய்ச்சி கூட்டங்கள் நடத்தினார்கள். சகோ. குமாரதாஸோடு சகோ. புதுக்குணத்தாரும் சேர்ந்து கொண்டார். பின்பு நாகர்கோவிலிலும் சுற்றுப்புறக்கிராமங்களிலும் அநேக கூட்டங்கள் நடத்தி சத்தியத்தை பரப்பினார்கள், இதன் மத்தியில் சகோ. டேவி அவர்கள் சென்னை சென்று வந்தார், இதனால் சென்னையிலும் அநேகர் சத்தியத்திற்கு உட்படலானார்கள். இப்படியிருக்கையில், அமெரிக்காவில் இருந்த பாஸ்டர். ரஸல் அவர்கள் சகோ. ஹாட் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி, சகோ. டேவி அவர்களைப் பார்த்து வரச் செய்தார். அவர் சென்னை வந்து, அநேக இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு, இறுதியில் நாகர்கோவில் வந்து அங்குள்ள S.P. டேவியையும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களையும் கண்டு சொத்தவிளையிலும், கோட்டையடியிலும் அநேக சத்திய போதனை கூட்டங்கள் நடத்தி விட்டு அமெரிக்கா திரும்பிச் சென்றார். 1912ல் பாஸ்டர். ரஸல் அவர்கள் இந்தியா வந்து அநேக இடங்களுக்குச் சென்று பின்னர் நாகர்கோவிலுக்குச் சென்றடைந்தார். அப்போது அவர் ஆலயங்களில் பேச அனுமதி மறுக்கப்பட்டது. இருப்பினும் பொது இடங்களில் மேடைகள் அமைத்து சத்திய பிரச்சாரங்கள் செய்தார். சிலர் ஏற்றுக் கொண்டார்கள். பலர் மறுத்தார்கள். பாஸ்டர். ரஸல் அவர்கள் அநேக புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் கொடுத்து, சத்திய விதை விதைத்து தன் தாய்நாடு திரும்பினார்.

பாஸ்டர். ரஸல் அவர்கள் அமெரிக்காவுக்கு திரும்பிப் போகும் பொழுது கொடுத்து விட்டுச் சென்ற **"சத்திய வேத பாடங்கள்"** ("Studies in the Scriptures") போன்ற புத்தகங்களை படித்து, சிறு சிறு கூட்டங்களாக ஒன்றுகூடி சத்தியத்தை ஆராய ஆரம்பித்தார்கள். அதனால் சத்திய அறிவில் பலப்பட்டார்கள். சகோ.S.P.டேவியும் (இவரது முழுப்பெயர் S.P.தேவசகாயம் என்பதாகும்) தன் ஊழியத்தை ஊக்கமாய்ச் செய்தார். ஒளிச் சித்திர படங்களோடும், கிராமபோன் பாடல்களோடும் (இவை அக்காலத்தில் நூதன கருவிகளாகும்) சத்திய பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது.

இந்தக் கூட்டத்தார் திருவாங்கூரிலிருந்து சென்னை வரை தங்கள் சத்தியபிரசாரத்தை விஸ்தரித்துக் கொண்டு போனார்கள்.அக்காலத்தில் வாட்ச் டவர் சங்கத்தின் பெயரால் சென்னை ராயபுரத்தில் ஒரு சிறு கூட்டமாக வாரம் மூன்று முறைகூடி ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக்கூட்டங்கள் நடத்திக் கொண்டு வந்தார்கள். திருவாங்கூரிலிருந்து வாட்ச் டவர் பிரதிநிதியாக சகோ. டேவி அவர்கள் சென்னை சென்று மேற்பார்வையிட்டு வந்தார். சென்னை கிறிஸ்தவ கலாசாலையில் சகோ.V.தேவ சந்தோஷம் என்பவர் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். இவர் பூர்வீகத்தில் லுத்தரன் சபையைச் சேர்ந்தவர் . இருப்பினும் பாஸ்டர். ரஸலின் நூல்களை தீவிரமாகப் படித்து வந்தார். வாட்ச் டவர் சங்கத்தாரோடும், ஏழாம் நாள் அட்வென்ட் சபையாரோடும் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களின் போதகங்களை கேட்பதில் வெகு ஆர்வம் காட்டி வந்தார். இயற்கையாக ஏற்பட்டிருந்த இந்த வசதிகள் இவர் சத்திய பிரகாசம் பெற வசதியளித்தன. எனவே வாட்ச்டவர் சங்கத்தினரால் இவர் பிரதிஷ்டைக்கு உட்பட்டு சென்னைக்கு மூப்பராக நியமனம் பெற்றார். இச்சம்பவங்கள் 1914–க்கும் 1917–க்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் நடந்தேறியவைகளாகும்.

அக்காலத்தில் சென்னையில் மேரியம்மாள் என்கிற சகோதரி ஒருவர் இருந்தார். மேரியம்மாவை யாவரும் லாயரம்மாள் என்றே அன்பாக அழைப்பார்கள். அட்வகேட் G.தேவசகாயம் என்பவர் இவரது கணவராவார். வேதமாணவ ஐக்கிய சங்கம் தமிழ்நாட்டில் ஏற்பட்டது முதல் இந்த சகோதரி ஓர் அங்கமாக இருந்து, அதற்கு வேண்டிய பொருளுதவி செய்து வந்தார். ஒவ்வொரு பொதுக்கூட்டத்திற்கும் வந்திருந்து சகோ. தேவசந்தோஷத்திற்கு உதவியாக இருந்து சத்திய பிரச்சார வேலையில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். 1943ல் திருச்சியில் கூடிய பொதுக்கூட்டத்திற்கு கடைசி முறையாக வந்திருந்தார். அதன்பிறகு உடல்நலங்குன்றி 1945 நவம்பர் 22–ந்தேதியில் சென்னை பல்லாவரத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

சகோ.S.P டேவி அவர்கள் 1939 பிப்ரவரி மாதம் 24–ந்தேதி திருவாங்கூரிலுள்ள செல்லபுரத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். நமது சபை பாட்டுப் புத்தகத்தில் S.P.D. என்று குறிப்பிட்டிருப்பவர் இவர் தான் என்பதையும் நினைவூட்டுகிறோம். திருநெல்வேலி மாவட்டத்தில் பிரகாசபுரம் என்னும் ஊரைச்சேர்ந்த, Y.ஜெபமணி என்பவர் சிறிது காலம் சிங்கப்பூரில் வசித்து வந்தார். அவர் அங்கு இருக்கும் பொழுது பாஸ்டர் ரஸலின் வெளியீடுகளை வாசித்து சத்திய பிரகாசம் பெற்றார்.இவர் இந்தியாவிற்கு திரும்பியதும் வேதமாணவர்களோடு சேர்ந்து ஊழியம் செய்து கொண்டு வந்தார். அதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் சத்தியம் பரவினது.
இப்படியாக சத்திய அறிவில் தேர்ச்சி பெற்ற வேதமாணவர்கள் 1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பாளையங்கோட்டையில் ஒன்று கூடி தங்கள் **முதலாம் பொதுக்கூட்டத்தை** (**"FIRST BIBLE STUDENT'S CONVENTION"**) நடத்தினார்கள்.

முதல் பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12. சென்னை மெஞ்ஞானபுரம், நாகர்கோவில், சிவகாசி, கோட்டயம், திருவல்லா முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் S.P.டேவி, தேவ சந்தோஷம், D.குமாரதாஸ், ஞானசிகாமணி ஆகியோர் சங்க உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன்பிறகு உடனடியாக அதே ஆண்டில் டிசம்பரில் மீண்டும் நாகர்கோவிலில் 2–வது பொதுக்கூட்டத்தை கூட்டினார்கள்.வந்திருந்த சகோதரர்களின் எண்ணிக்கை 8 பேர்கள். பிற்காலத்தில் இந்த எண்ணிக்கை விரிவடைந்து ஓர் பெரிய சபையாக உருவாகும் என்ற உறுதியான நம்பிக்கையோடு காரியங்களை நடத்தியிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் சகோ.V.தேவசந்தோஷம் காரியதரிசியாகவும், D.குமாரதாஸ், ஆலிவர் B.A (சென்னை) ஆகியோர் உதவிக்காரராகவும், மிகாயேல் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அக்காலத்தில் இருந்த வைராக்கியத்தையும் அதன் பயனாய் எடுத்துக்கொண்ட பிரயாசைகளையும் நாம் சாதாரணமாக எண்ணிவிட முடியாது. கர்த்தருடைய பெரிதான சக்தி இவர்களைக் கொண்டு கிரியை செய்தது என்பது தான் உண்மை. **(அன்று அவர்கள் பாளையங்கோட்டையிலும், நாகர்கோவிலிலும் ஆரம்பித்து வைத்த பொதுக் கூட்டமானது இப்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது)**

சென்னை சகோதரர். V.தேவசந்தோஷமும் உடன் ஊழியர்களும் சேர்ந்து எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் காரணமாக 1920 –ம் ஆண்டு பிப்ரவரி மாதப் பத்திரிக்கையில் கீழ்க்கண்ட ஊர்களில் சத்திய பிரச்சார வேலை நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். சென்னை, ஈரோடு, கோயம்புத்தூர், சித்தூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, சிவகாசி, மெஞ்ஞானபுரம், நாகர்கோவில், கோட்டையடி, நெய்யாத்தங்கரா, மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், சோபனபுரம், வாகைகுளம், சங்கரன்கோவில், நல்லூர், ஆலங்குளம், மேட்டூர், புதுப்பட்டி, சீவலசமுத்திரம், சேலம், மேட்டுப்பாளையம், உதகமண்டலம், பெங்களூர் முதலிய இடங்களிலெல்லாம் அலைந்து திரிந்து சுவிசேஷ வேலை செய்திருக்கிறார்கள். அங்கங்கள் சிறுசிறு கூட்டங்கள் நடத்தி பிரசங்கிப்பது, தனிப்பட்ட ஆட்களோடு பேசுவது, ஒளிச்சித்திரப் படக்காட்சிகளைக் காட்டிப் பேசுவது, இலவச பிரதிகளை விநியோகிப்பது ஆகிய ஊழியங்களை செய்திருக்கிறார்கள். சகோ. V. தேவசந்தோஷம் தமது சுற்றுப் பிரயாணத்தில் 1916 மற்றும் 1917ம் ஆண்டுகளில் திருச்சி கண்டித்தெருவிலிருந்த சகோ.டேவிட் பெருமாள் என்பவரை முதன்முதலில் சந்தித்து உரையாடி, அவருக்கு சத்தியச்செய்திகளை வெளிப்படுத்தினார். அவர் மூலம் T.ஆரோக்கியசாமி என்பவர் (டாக்டர் மதுரம் அச்சகத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்) சத்தியத்திற்குட்பட்டு இருவரும் வேத ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இடையிடையே சகோதரர். தேவசந்தோஷம் அவர்கள் விடுமுறை காலங்களில் திருச்சிக்கு வந்து அவர்கள் ஆதரவில் பல ஆராய்ச்சி கூட்டங்கள் நடத்தினார். இதன் பயனாக திருச்சியிலும், அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பொன்மலை, மேலகல்கண்டார்கோட்டை, ஸ்ரீரங்கம், தொட்டியம், பூதலூர், கண்டமங்கலம், மேகளத்தூர், தஞ்சாவூர், அரியமங்கலம், கிராப்பட்டி, சூவூர், லால்குடி, சவரியார்பட்டிணம், எட்டரைகோப்பு, ஆளவந்தா நல்லூர், டால்மியாபுரம், மேட்டுப்பட்டி ஆகிய இடங்களில் எல்லாம் சத்தியம் பரவலாயிற்று. அதன் பயனாக சத்தியத்தை ஏற்றுக்கொண்ட பலர் வெளிச்சம் பெற்று பெயர்சபைகளை விட்டு காலா காலத்தில் வெளியேறி வந்தனர்.இவர்களில் பெரும்பான்மையோர் ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்தவர்கள்.

**சகோ. அன்பையா,**
1955 ஏப்ரல் மாத பத்திரிக்கை வெளியீடு.

# வேதமாணவர் சபை

தேவன் தம்முடைய குமாரன் கிறிஸ்து மூலமாக இந்த சுவிசேஷ யுக காலத்தில மெய் சத்தியத்தை உலகிற்கு அறிவித்தார். கிறிஸ்து போதித்த போதகங்களை பரிசுத்த ஆவியை பெற்று அபபோஸ்தலர்களும், சீஷர்களும் பெந்தகொஸ்தே நாளிலிருந்து போதித்து வந்தனர். அப்போஸ்தலர்களும் சீஷர்களும் மரித்த பிறகு சபையில் மெய் சத்தியம் மங்கி தப்பறையான போதகங்கள் நுழைய ஆரம்பித்தன. கி.பி. 4ம் நூற்றாண்டில் ரோம ராஜா கான்சான்டைன் மூலம் பல புற மத தப்பறைகள் சபையில் புகுந்தன. திருத்துவ போதனை. நரகம். உத்திரிக்கும் ஸ்தலம், அழியாத ஆத்துமா, ஏழாம் நாள் ஆசரிப்பு, விக்கிரக ஆராதனை, மரியாள் வணக்கம், பூஜை பலி போன்றவைகள் அவற்றில் சிலவாகும். ஆனால் தேவன் இந்த இருண்ட காலத்திலும் ஏரியஸ், பீட்டர் வால்டோ, ஜான் வைக்கிளிப், மார்ட்டின் லூத்தர் மற்றும் சார்லஸ் டேஸ் ரஸல் போன்ற ஊழியக்காரர்கள் மூலம் மெய் சத்தியங்களை தமது பிள்ளைகளுக்கு அறிவித்து வருகிறார். சகோ.ரஸல் உலக பயணத்தின்போது 1912–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்தியா வந்து மெய் சத்தியங்களை போதித்தார். அவர் மூலம் சத்தியத்தை அறிந்து சகோ. S.P. டேவி என்ற தேவசகாயம் இந்தியாவில் வேதமாணவர் சபையை ஸ்தாபித்தார்.

## வேதமாணவர் ஐக்கிய சபை தலைமையகம் சென்னை:

சகோ. S.P. தேவசகாயம், V.தேவசந்தோஷம் என்ற சகோதரருடன் சேர்ந்து, 1917–ஆம் ஆண்டு சென்னையில் தலைமை அலுவலகத்தை ஏற்படுத்தி, ஊழியங்கள் செய்து வந்தார். அப்போது, **"அசோசியேட்டட் வேதமாணவர் ஐக்கிய சபை"** என்று அழைக்கப்பட்டது.

## வேதமாணவர்களின் முதல் மாநாடு:

1919–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், பாளையங்கோட்டையில் **"வேதமாணவர் பொதுக் கூட்டம்"** என்ற பெயரால் முதல் மாநாடு நடைபெற்றது. மீண்டும் 1919–ஆம் ஆண்டு நாகர்கோயிலில் டிசம்பர் 27–30 ல் 2–வது பொது மாநாடு நடைபெற்றது. இதில் 8 பேர் கலந்து கொண்டனர். இதில் முதல் காரியதரிசியாக இருந்தவர் சென்னை சகோதரர். V.தேவசந்தோஷம் 1923 டிசம்பர் 27–30ல் நடைபெற்ற 6–வது மாநாட்டில் 12 பேர்கள் கலந்து கொண்டு, சில வட்டாரங்களைப் பிரித்து அதற்காக ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். சென்னை – சகோதரர் V.தேவசந்தோஷம், கோயமுத்தூர் ஜில்லா, சகோதரர் P.செல்லையா,மிகாயேல், வட ஆற்காடு ஜில்லா, சகோதரர் A.ஞானசிகாமணி, திருநெல்வேலி ஜில்லா. சகோ. J.ஜெயமணி, திருவாங்கூர், சகோ.S.P.டேவி ரசல்புரம், சகோ.குமாரதாஸ், கோட்டையடி ஆகும். முதல் காரிய நிர்வாக கமிட்டி உறுப்பினர்களாக சகோ.V.தேவசந்தோஷம், சகோ.S.P.டேவி, சகோ. Y.ஜெபமணி நியமிக்கப்பட்டனர்.

## 1925 ம் ஆண்டு மாநாடும் 8 கிளைச்சபைகளும்:

1925–ஆம் ஆண்டு பாளையங்கோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் 8 கிளைச்சபைகளும், அதன் மூப்பன்மார்களும் அறிவிக்கப்பட்டனர். இதில் திருச்சி, கோவை, இலங்கை ஆகிய ஊர்கள் இடம் பெற்றன. திருச்சியில் சகோ.டேவிட் பெருமாள், கோவையில் சகோ.T.J.தேவசகாயம், இலங்கையில் சகோ. D.N.விக்டர் ஆகியோரும் மூப்பர்களாயிருந்தனர்.

## சகோ.S.P. தேவசகாயம் அவர்களின் நித்திரை:

மெய்யான சத்தியத்தை இந்தியாவிற்குக் கொண்டுவரக் காரணமாய் இருந்த, சகோ.S.P.தேவசகாயம் அவர்கள் நாகர்கோயிலில் 1939–ஆம் ஆண்டு மரணமடைந்தார். 1925ஆம் ஆண்டு நடந்த 8–ஆம் வேதமாணவர் ஐக்கிய சங்க மாநாட்டிலும், அதன் பின்னர் நடைபெற்ற மாநாடுகளிலும் இவர் கலந்து கொண்டதாக எவ்வித குறிப்புகளும் இல்லை.

## வேதமாணவர்களின் மாத இதழ்:

வேதமாணவர்களின் மாதாந்திரப் பத்திரிக்கை முதன் முதலில் 1919–ம் ஆண்டு அக்டோபர் மாதம், சென்னை ஜார்ஜ் டவுனில் இருந்து, V.தேவசந்தோஷம் அவர்கள் காரியதரிசியும், பத்திராதிபருமாய் இருந்து வெளியிடப்பட்டது. இதன் விலை, சந்தாவாக ஒரு ஆண்டிற்கு அக்கால நாணயத்தில் 8 அணா, தற்போதைய கணக்கின்படி 50 ந.பைசா.

## இதன் நோக்கம்

1. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பது.

2. வேத சத்தியங்களை, மனுஷ பாரம்பரியத்தோடு சம்பந்தப்படுத்தாமல் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்துவது. I கொரி 2:13.

3. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் எடுத்துரைப்பது.

4. தீர்க்கதரிசன நிறைவேறுதல்களைக் கவனித்து அவைகளை வேதத்தின் மேல் வாஞ்சையுள்ளவர்களுக்கு தெரிவிப்பது.

5. ஆங்கில மொழியில் உள்ள சில அபூர்வமான வசனங்களை மொழிபெயர்த்து அச்சிடுவது.

6. வேத வசனங்களைப் பற்றிய சந்தேகங்களை பத்திரிக்கைக்குத் தெரிவித்தல், அவற்றிற்குப் பத்திரிக்கையின் மூலம் பதிலளிப்பது–போன்றதாகும்,

## சத்தியத்தின் நிமித்தம் –வேதமாணவர்கள் கைது செய்யப்படல்.

1942–ம் ஆண்டில், உலக ராஜியங்களின் அழிவையும், தேவ ராஜியம் ஸ்தாபிக்கப் படுவதையும் வேத மாணவர் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தினர். அச்சமயம், ஆங்கிலேயப் பேரரசு உலகம் முழுவதும் பரவிக்கிடந்தது. அதனால், தங்களுடைய அரசு அழிந்துவிடும் என்று வெளிப்படையாக அறிவித்ததால், வேதமாணவர்களின் பொதுக்காரியதரிசி, பத்திராதிபர், ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அது சமயம் T.J.தேவசகாயம் அவர்களும், T.C. தேவக்கண்ணு அவர்களும், நீதி மன்றத்தில் வேதத்தில் உள்ள தீர்க்க தரிசனங்களை விளக்கிக் காண்பித்து, சிறையில் இருந்தவர்களை வெற்றியுடன் விடுதலையாக்கினார்கள்.

இப்படி பல இன்னல்களின் மத்தியில் இன்னும் வேதமாணவர்களின் ஊழியம் தொடர்கிறது.

*–சகோ. D. தானியேல் – கோவை*

# தேவ ஊழியத்தில் வேதமாணவர்கள்

வேதமாணவர் சபை வளர்வதற்கு கீழ்க்கண்ட முன்னாள் மூத்த சகோதர்களின் ஊழியமே மிகச் சிறந்தது எனலாம். அவ்வாறு ஊழியம் செய்த முன்னாள் மூத்த சகோதர்கள். சகோ. S.P.டேவி என்ற தேவசகாயம், R.E. ஜோசப், J.சாமுயேல், குமாரதாஸ், புதுக்குணத்தான், அன்பையா, T.J. தேவசகாயம், V.தேவ சந்தோசம், Y.ஜெபமணி, ஞானசிகாமணி, C.J.ஆலிவர், P.மிகாயேல், டேவிட் பெருமாள், V.ஜான், A.சூசைராஜ், T.C.தேவக்கண்ணு (மதுக்கரை), ஜார்ஜ் (சென்னை), D.பர்ணபாஸ், S.R.கில்பர்ட், S.ஜோசப் சுந்தர் ராஜன் (பெங்களூர்), ஜெயம் சாமுயேல் (பெங்களூர்), R.H. வேதமுத்து (மதுரை), S.ஆபிரகாம் (விருதுநகர்), O.S.ரத்தினம் (மதுரை), ஞானமாணிக்கம் (ஈரோடு), சீனிராஜ் (மேட்டுப்பாளையம்), A.அடைக்கலம் (தஞ்சை), எட்வர்ட் ஜோயல் (நாகர்கோயில்), சிப்பாய் ஆரோக்கியசாமி (திருச்சி), தேவசகாயம் (கோவை) அவரது மனைவி தெவசம்மாள் தியோபலஸ் (கோவை), தவமணி (ஊட்டி), சிகாமணிஜய்யா (கோவை), S.செபஸ்டியன் (திருச்சி), பெர்னான்டஸ் (பெங்களூர்), S.கனகரத்தினம் (கோவை), சந்தியாகு (திருச்சி), ரத்தினசாமி (திருச்சி), F.இருதயம் (திருச்சி), முத்துக்குரூஸ் (போத்தனூர்), D.P.சந்தோசம் (நெய்வேலி), S.தங்கதுரை (மதுரை), W.C.ஜெயப்பா (மைசூர்), இம்மானுயேல்தாஸ் (ஊட்டி), துரைராஜ், P. ஜேசுரத்தினம் (கோவை), A.R. ஜேசுதாஸ்(கோவை), மரியஇக்னேஷியஸ் (டால்மியாபுரம்), M.A. சவரிமுத்து (டால்மியாபுரம்), P.T. ரத்தினசாமி (குன்னத்தூர்), சவரிமுத்து (திருச்சி), ஏசுதாஸ் (ஈரோடு), I.அந்தோணி ஜோசப்(IAJ) (கோவை), ராஜேந்திரன் (கோவை), A.J.தேவராஜ் (கோவை).

இவர்களது ஊழியத்தால் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் வேதமாணவர்கள் பல கிளைச்சபைகளை தோற்றுவித்தார்கள்.

மூத்த சகோதரர்களின் மறைவுக்குப் பின்னர் மேலும் அநேக கிளைச் சபைகள் தேவ கிருபையால் வளர்ச்சி பெற்றன. கிளைச்சபை வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிப்பவர்கள்:

1. **வேதமாணவர் கிளைச்சபை – கோவை**
சகோ D.தானியேல், V.ஜேக்கப், J.அந்தோணிசாமி, J.எபிமனோகரன், S.A.டேவிட், நியூலின் ராஜ்குமார், அலெக்ஸ், ஜீவானந்தம், ஜார்ஜ், தேவகிருபானந்தம், ஆபிரகாம், ரூபன், யூஜின் மற்றும் சகோதரர்கள்.

2. **வேதமாணவர் கிளைச்சபை – போத்தனூர்**
சகோ . ஜான்சன், ராஜ்குமார் மற்றும் சகோதரர்கள்.

3. **வேதமாணவர் கிளைச்சபை – ஒண்டிபுதூர் (கோவை)**
சகோ. L. இருதயராஜ், Y.ராஜா, வேல்ராஜ் மற்றும் சகோதரர்கள்.

4. **வேதமாணவர் கிளைச்சபை – மேட்டுப்பாளையம்**
சகோ. பிரான்சிஸ்பால், ஜானி, ஜான்சன், சேகர் மற்றும் சகோதரர்கள்.

5. **வேதமாணவர் கிளைச்சபை – ஈரோடு**
சகோ.S.T.பாலுசாமி, பாஸ்கர், ரூபன் மற்றும் சகோதரர்கள்.

6. **வேதமாணவர் கிளைச்சபை – வெலிங்டன்**
சகோ.C.ஜார்ஜ், வில்லியம்ஸ், பெர்னார்டு, மைக்கேல், வின்சென்ட், சில்வெஸ்டர் மற்றும் சகோதரர்கள்.

7. **வேதமாணவர் கிளைச்சபை – குன்னூர் கோத்தகிரி**
சகோ. D.ஜெயராஜ், ஜோசுவா, தர்மராஜ், D. சேகர் மற்றும் சகோதரர்கள்.

8. **வேதமாணவர் கிளைச்சபை – ஊட்டி**
சகோ. பிரேம்ராஜ் மற்றும் சகோதரர்கள்.

9. **வேதமாணவர் கிளைச்சபை – சேலம்**
சகோ. மதிவாணன், கார்மேகம், பாண்டியன், சேகர், தியாகராஜன் மற்றும் சகோதரர்கள்.

10. **வேதமாணவர் கிளைச்சபை – வேலூர்**
சகோ.சசிகுமார், அன்பரசன் மற்றும் சகோதரர்கள்

11. **வேதமாணவர் கிளைச்சபை – மணப்பாறை** (பொத்தமேட்டுப்பட்டி)
சகோ.S.சின்னப்பன், A.ஜெயராஜ், துரைமனோகரன், ஜான் வில்லியம், ஸ்டீபன்தனராஜ் C.ஆபிரகாம் மற்றும் சகோதரர்கள்.

12. **வேதமாணவர் கிளைச்சபை – டால்மியாபுரம்**
சகோ.K.P.ஆரோக்கியசாமி, ஆனந்த், I.A.ஜேக்கப் மற்றும் சகோதரர்கள் .

13. **வேதமாணவர் கிளைச்சபை– திருச்சி**
சகோ.M.D. சேவியர் ராஜ், R.ஆரோக்கியசாமி, J.ஜோசப், A.ஜோசப், சார்லஸ்,சூசைராஜ், சந்தானராஜ், அருள்சாமி, கிறிஸ்டியான், S.A.எட்வீன், T.நேசராஜ், பால்ராஜ், சகாயராஜ், S.அந்துவான், வில்பிரட் தேவராஜ் மற்றும் சகோதரர்கள்

14. **வேதமாணவர் கிளைச்சபை– மதுரை /ஆண்டிப்பட்டி**
சகோ. O.S.R கிறிஸ்துதாஸ்,போத்துராஜ்,கணேசன் மற்றும் சகோதரர்கள்.

15. **வேதமாணவர் கிளைச்சபை– சென்னை.**
சகோ. R.செல்வராஜ்,எசேக்கியேல், J.உதயகுமார். ஜான்டேவிட், M.டேவிட், விக்டர் இம்மானுயேல், மரிய ஆரோக்கியம், ஆரோன் மற்றும் சகோதரர்கள்.

16. **வேதமாணவர் கிளைச்சபை – பொள்ளாச்சி**
சகோ. ஜெயம் சேனாபதி மற்றும் சகோதரர்கள்.

17. **வேதமாணவர்கிளைச்சபை – குன்னத்தூர்**
சகோ. நெல்சன், அன்பழகன் மற்றும் சகோதரர்கள்.

18. **வேதமாணவர் கிளைச்சபை – பெங்களூர்**
சகோ. ரவிக்குமார், S.J.பிரசாத், சார்லஸ் சுரேஷ், ஜெயபிரசாத், மூர்த்தி, பார்த்தசாரதி, Dr. லூக், லூயிஸ், லிக்கோரியஸ், அலெக்ஸாண்டர், மற்றும் சகோதரர்கள்.

19. **வேதமாணவர்கள் கிளைச்சபை – மைசூர்/மாண்டியா**
சகோ.M.S.மரியதாஸ், M.S.ஆரோக்கியதாஸ், புட்டு சுந்தரா, பாஸ்கர்ராவ், புஷ்பராஜ், தினகரன், B.S ரவீந்திரன்,கன்சால்வஸ் மற்றும் சகோதரர்கள்.

20. **வேதமாணவர் கிளைச்சபை –. கோட்டயம் /கேரளா**
சகோ. V.A. தாமஸ் மற்றும் சகோதரர்கள்

21. **வேதமாணவர் கிளைச்சபை – மங்களூர் (கர்நாடகா)**
சகோ. அலெக்சாண்டர் கோட்டியன் மற்றும் சகோதரர்கள்

சகோதரர். பாஸ்டர் C.T.ரஸல் (அமெரிக்கா) அவர்களால் 1876–ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேதமாணவர் சபை அவரது மறைவுக்குப் பின்னர் அகில உலகிலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

1919–ம் ஆண்டு 12 சகோதரர்களால் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேதமாணவர் சபை தேவ வழி நடத்துதலால் உண்மை சத்தியத்தை தமிழ்நாடு,கர்நாடகா, கேரளா ஆகிய தென்மாநிலங்களில் அறிவித்ததன் பலனாக தற்போது 2005–ஆம் ஆண்டு வரை பல வேதமாணவர் கிளைச் சபைகளை உருவாக்கி சுமார் 4000 பேர்களைக் கொண்ட சிறுமந்தைக் கூட்டமாக செயல்பட்டு வருகிறது. யெகோவா தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பரம்பரை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், யெகோவா தேவனையும், அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறியாத புற ஜாதியார் மத்தியிலும் இந்த வேதமாணவ சபையார் அநேக நற்செய்திகளைக் கூறி வருகிறார்கள்.

சிறுவர்களுக்கான பயிற்சியில் வெற்றிபெற்ற , வெற்றிபெறாத அனைத்து சிறுவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாநாடு முடிவு ஜெபம் : சகோ. டேவிட் புஷ்பராஜ் (கோவை)

*– சகோ. எபிமனோகரன். பொதுக்காரிசதரிசி கோவை*

## நித்திரை அறிவிப்பு – அமெரிக்கா

இந்தியாவுக்கு மூன்று முறை வருகை தந்து சகோதர, சகோதரிகளுக்கு அறிமுகமான அமெரிக்கா ஒகியோவில் வசிக்கும் வேதமாணவர் சகோ. மைக்கேல் பிரான் அவர்களின் துணைவி சகோதரி. ஜிஞ்சர் பிரான் அவர்கள் கடந்த 5–5–2004 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

*– சகோ. எபிமனோகரன். பொதுக்காரியதரிசி கோவை*

## பொதுசபை நிர்வாகக்கூட்டம்– கோவை

நாள் : 27.06.2004 இடம் : BSA Hall– கோவை

சென்னையில் நடைபெற்ற 83வது பொதுமாநாடு வரவு, செலவு கணக்குகள் சென்னை கிளைச்சபையால் அறிவிக்கப்பட்டது.

| | |
|---|---|
| பொதுசபை மூலம் வரவு | ரூ. 1,29,000/– |
| கிளைச் சபைகள் மூலம் வரவு | ரூ. 54,500/– |
| Special Fund | ரூ. 650/– |
| மொத்த வரவு | ரூ. 1,84,150/– |
| மொத்த செலவு | ரூ. 1,87,468/– |
| அதிக செலவு | ரூ. 3,318/– |

அதிக செலவு தொகையை பொதுசபை ஏற்றுக் கொண்டது.

## இஸ்ரயேல் பற்றிய செய்தி

| | | |
|---|---|---|
| தேசத்தின் பரப்பளவு | : | 20,772 ச.கீ. மீட்டர் நீளம் 290 மைல் (470 கி.மீ.)<br>அகலம் 85 மைல் (135 கி.மீ.) |
| தேசத்தின் அமைவிடம் | : | உலகின் மத்திய கிழக்குப் பகுதி,<br>மத்திய தரைக்கடலின் கிழக்குக் கடற்கரை<br>ஐரோப்பியா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களின் சங்கமம். |
| தட்பவெப்பநிலை | : | வெப்பநாடு, மழைகாலம் நவம்பர், மார்ச். |

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | எருசலேம் |
| பார்லிமெண்ட | : | நெசெட் (Kneset) . |
| நாணயம் | : | சேக்கல் (Rs. 10/-) |
| ஜனத்தொகை | : | 62 இலட்சம் |

**மத அடிப்படையில் மக்கள் தொகை**
யூதர் 80.5 %., முஸ்லீம் 14.6%, கிறிஸ்தவர் 3.2%, மற்றவர்1.7%,

**பொருளாதாரம்**
ஏற்றுமதி 35.0 மில்லியன்டாலர், இறக்குமதி 43.2 மில்லியன்டாலர்
முக்கிய நகரங்கள் எருசலேம், டெல் அவிவ், யோப்பா, பெயர் செபா

*– நன்றி இஸ்ரேல் டுடே*

**ஞானஸ்நான உடன்படிக்கை – திருச்சி**

நாள் : 1–08–2004 இடம் : காவேரி ஆறு – திருச்சி

**உடன்படிக்கை செய்து கொண்டவர்:**
சகோ. S. ராஜா 27 S/o. சகோ. சம்பத்குமார் சங்கிலியாண்டிபுரம், திருச்சி.

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**
சகோதரர்கள். எபிமனோகரன், பிரான்சிஸ்பால், சுரேஷ் கிளைமண்ட்

*– சகோ. சூசைராஜ். திருச்சி கிளை மூப்பர்*

**ஒரு நாள் மாநாடு – போத்தனூர்**

நாள் :08–08–2004 இடம் : ஸ்ரீ பாலாஜி கிருபா கல்யாண மண்டபம் – போத்தனூர்

தலைமை : சகோ.D. தானியேல். கோவை

அநேக இடங்களிலிருந்து சகோதர, சகோதரிகள் 300 பேர் கலந்து கொண்டுமாநாட்டை சிறப்பித்தார்கள்.

*– சகோ. ஜான்சன். மூப்பர் போத்தனூர் கிளை*

**ஒரு நாள் மாநாடும் ஞானஸ்நான உடன்படிக்கையும் – வெலிங்டன்**

நாள் :14–08–2004 ஞாயிறு இடம் : வெலிங்டன் சபை

நாள் :15–08–2004 திங்கள் இடம் : வெலிங்டன் நீரோடை

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**
சகோ. J.R. கென்னடி
சகோதரி. டெய்சி கென்னடி
சகோ. முரளிராஜன்,
சகோதரி. மாலதி

*– சகோ.C . ஜார்ஜ். மூப்பர் வெலிங்டன் கிளை*

1919 முதல் 2004 ஆண்டு வரை இந்தியாவில் வேதமாணவர்கள் நடத்தியுள்ள மாநாடு இடங்கள், நாட்கள் மற்றும் அச்சமயங்களில் சபையை வழி நடத்தி சென்ற பொதுக்காரியதரிசிகள் பற்றிய செய்திகளை, தொடர்ந்து 2004 செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாத பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ளது. இச் செய்தியை வெளியிட உதவியவர் சகோ. O.S.R .கிறிஸ்துதாஸ். மதுரை கிளை மூப்பர்.

**ஒரு நாள் மாநாடு திருவொற்றியூர் – சென்னை**

நாள் : 29–08–2004 இடம் : வாணிபர் திருமண மண்டபம் – சென்னை

தலைமை : சகோ. J.எபிமனோகரன்

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. சின்னப்பன் (மணவை) | : | பிரதான ஆசாரியனான யோசுவா, |
| சகோ.தினகரன் (மைசூர்) | : | கோபுரங்கள் விழும் நாள் |
| சகோ.ஜோசுவா (குன்னூர்) | : | நாகமானின் ஏழு முழுகுதல் |
| சகோ.ஜான்சன் | : | செப்பனா எலியாக்கீம் |
| சகோ.பிரான்சிஸ் பால் | : | முதிர்ந்த பயிர்களை அறுவடை செய்தல் |
| சகோ.மரியதாஸ் (மைசூர்) | : | தீர்க்கதரிசனத்தில் இஸ்லாமியர்கள் |

முடிவு ஜெபம் : சகோ. இருதயராஜ் (ஒண்டிபுதூர்)

*– சகோ. விக்டர் இமானுயேல். திருவொற்றியூர் கிளை மூப்பர்.*

**வாலிபர் கருத்தரங்கு – ஈரோடு**

நாள் : 2004, செப் 3,4,5 இடம் : சந்திர சேகர் மெமோரியல் ஹால் – ஈரோடு

மூன்று நாட்களில் இளைஞர்களுக்கு வேதாகமப் பயிற்சி நடைபெற்றது. அதன் பின்னர் அவர்கள் தூது கொடுத்தும், வேதாகம வினாக்களுக்கு விடையளித்தும், பாடல்கள் பாடியும் செயல்முறை விளக்கங்கள் அளித்தும் தங்களது தாலந்துகளை வெளிப்படுத்தினர். பல்வேறு இடங்களிலிருந்து சுமார் 200 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த கருத்தரங்கு மிக்க பயனுள்ளதாக இருந்ததாக வாலிப பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

**ஞானஸ்நான உடன்படிக்கை – பொத்தமேட்டுப்பட்டி**

நாள் :19–09–2004 இடம் : ஜெயராஜ் தோட்டம் – மணவை

**உடன்படிக்கை செய்து கொண்டவர்:**

சகோதரி. S. டாரத்தி மெர்சி 24 D/o.சகோ. ஸ்டீபன் தன்ராஜ்

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**

சகோதரர்கள் A.ஜெயராஜ், சகாயராஜ் (திருச்சி)

*– சகோ.A. ஜெயராஜ். மூப்பர் பொத்தமேட்டுப்பட்டி கிளை*

**ஒரு நாள் மாநாடு – மணப்பாறை**

நாள்: 02–10–2004 இடம் : சகோ. சின்னப்பன் இல்லம் – மணவை

ஜெபம்: சகோ. ஜான்டேவிட் (சென்னை)

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. தினகரன் (மைசூர்) | : | கிதியோனுடைய தோல் |
| சகோ.வில்லியம்ஸ் | : | தேவ ஞானம் |
| சகோ.செல்வராஜ் (சென்னை) | : | அற்பமான ஆரம்ப நாள் |
| சகோ.நியூலின் ராஜ்குமார் (கோவை) | : | கானான் தேசம் |
| சகோ.மரியதாஸ் (மைசூர்) | : | ராஜரீக கல்யாண விருந்து |
| சகோ.எபிமனோகரன் | : | கிறிஸ்தவ ஜீவியம் |

முடிவு ஜெபம்: சகோ. சூசைராஜ் (மணவை)

மைசூர், வெலிங்டன், கோவை, பெரியகுளம், மணவை, சேலம், சென்னை, டால்மியாபுரம், திருச்சி, சங்கிலியாண்டபுரம் ஆகிய கிளைச்சபைகளிலிருந்து சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டார்கள்.

*– சகோ. V.ஜோசப் சவுரிராஜன் செயலர் மணவை கிளை*

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர் கிளைச்சபை**
**துவக்கவிழாவும் ஒரு நாள் மாநாடும் – திருச்சி**

நாள் : 17–10–2004 இடம் : சங்கிலியாண்டபுரம் – திருச்சி

துவக்கவிழா ஜெபம் : சகோ. டேவிட் (திருவொற்றியூர் – சென்னை)
தலைமை : சகோ. எபிமனோகரன். பொதுக்காரியதரிசி
சிறப்பு விருந்தினர் : சகோ. லாரிடேவிஸ் (USA)

**தேவ செய்தியை கொடுத்தவர்கள்:**
சகோதரர்கள்.விக்டர் இம்மானுயேல், உதயக்குமார், பிரான்சிஸ்பால்,

நாள் : 17–10–2004 இடம் : திருச்சி காவிரி நதி

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**
சகோ. ஜோசப் S/o.சகோ. பெ. குழந்தைசாமி
சகோ. ஆல்பர்ட் S/o.அம்புரோஸ்
சகோ. செபஸ்டின் ராஜ் S/o.பெ. ஞானமுத்து
சகோதரி. சகாயராணி W/o.சகோ. ஆல்பர்ட்
சகோதரி.விமலா W/o.சகோ. செபாஸ்டின்ராஜ்
சகோதரி.மேரி செமிதா D/o.தங்கபிரகாசம்
சகோதரி.பவுலின் D/o.பெ. அம்புரோஸ்
சகோதரி.லாவண்யா W/o.பெ. ஜோசப்
சகோதரி.டயானா D/o.செபாஸ்டின்ராஜ்

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**
சகோதரர்கள். எபிமனோகரன், சின்னப்பன், பிரான்சிஸ்பால்

*– சகோ. சூசைராஜ். சங்கிலியாண்டபுரம் கிளை, மூப்பர்.*

**உடையாப்பட்டி வேதமாணவர் கிளைச்சபை துவக்கவிழா – சேலம்**

நாள் : 6–11–2004 இடம் : வீரவன்னியர் திருமண மண்டபம் உடையாப்பட்டி சேலம்

சேலம் உடையாப்பட்டி வேதமாணவர் கிளைச்சபைக் கூடத்தை 6–11–2004 காலை 10.30 மணியளவில் பொதுக்காரியதரிசி சகோ. எபிமனோகரன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

சகோ. ஜோசப் (திருச்சி) : பக்தி வைராக்கியம்
சகோ.வில்லியம்ஸ் (வெலிங்டன்) : கிறிஸ்தவ ஜீவியத்தின் வெற்றிக்கான மூன்று இரகசியங்கள்
சகோ.செல்வராஜ் (சென்னை) : திரள் கூட்டம்
சகோ.இருதயராஜ் (ஒண்டிபுதூர்): ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டவாக்குத்தத்தம்
சகோ.உதயக்குமார் (சென்னை): 300 பேர்

சென்னை, திருச்சி, பொத்தமேட்டுப்பட்டி, சேலம், கோவை, வெலிங்டன் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 75 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

*– சகோ. மதிவாணன். மூப்பர் சேலம் கிளை*

**ஒரு நாள் மாநாடு – மணப்பாறை**

நாள் : 25–12–2004 இடம் : ஜெயராஜ் தோட்டம், பொத்தமேட்டுப்பட்டி, மணவை

தலைமை : சகோ. எபிமனோகரன். பொதுக்காரியதரிசி

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. நியூலின் (கோவை) | : | யூதா கோத்திரம் |
| சகோ.வில்லியம்ஸ் | : | நன்றி நவிலல் |
| சகோ.R.செல்வராஜ் (சென்னை) | : | நீதிமானாக்கப்படுதல் |
| சகோ.பிரான்சிஸ்பால் (மேட்டுப்பாளையம்): | | தாண் கோத்திரம் |
| சகோ.இருதயராஜ் (ஒண்டிபுதூர்) | : | யூதா |
| சகோ.பிரபாகரன் | : | சிலுவையில் கிறிஸ்துவோடு அறையப்பட்டேன். |

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

சகோ. காட்வின் இம்மானுயேல் S/o. சகோ.A. ஜெயராஜ். (மணவை) (24)

சகோ.மோகன் (கோவை) (46)

சகோதரி. ஸ்டெல்லா சம்பத் (46)

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**

சகோதரர்கள். A.ஜெயராஜ், எபிமனோகரன்

**விவாக ஆராதனை – மணவை**

திருச்சி, சகோ. பன்னீர் செல்வம், மேரி ஆகியோரின் திருமணம் வேதமாணவர் முறைப்படி நடைபெற்றது. சகோ. ஜெயராஜ் அவர்கள் மணமக்களின் கிறிஸ்துவ ஜீவியம் குறித்து பேசி மணமக்களை வாழ்த்தினார்கள். பல்வேறு இடங்களிலிருந்து சுமார் 350 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

*– சகோ. ஜெயராஜ். மூப்பர் பொத்தமேட்டுப்பட்டி கிளை*

**ஞானஸ்நான உடன்படிக்கையும் ஒரு நாள் மாநாடும்–ஆண்டிப்பட்டி**

நாள் : 26–12–2004 இடம் : சமுதாயக்கூடம் கொண்டமநாய்க்கன்பட்டி –ஆண்டிப்பட்டி

26–12–2004 காலை 7 மணிக்கு வைகை அணையில் கீழ்க்கண்ட சகோதரர்களுக்கு உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டது.

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ.திவான்பாபு | 24 | த/பெ. சகோ. போத்துராஜ். (பெரியகுளம்) |
| சகோ.கண்ணன் | 18 | ” ” |
| சகோ.கணேசன் | 50 | கொண்டமநாயக்கன்பட்டி |
| சகோ.கார்த்திக் | 20 | த/பெ. கணேசன் (கொண்டமநாயக்கன்பட்டி) |
| சகோ.சத்தி | 19 | கொண்டமநாயக்கன்பட்டி |
| சகோ.பரமசிவம் | 52 | ” |

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**

சகோ.C. ஜார்ஜ் (வெலிங்டன்)

சகோ. எபிமனோகரன்(கோவை)

சகோ.பிரான்சிஸ்பால் (மேட்டுப்பாளையம்).

காலை 10.00. வரவேற்பு : சகோ. போத்துராஜ்
மாநாட்டுத் தலைவர் : சகோ. எபிமனோகரன்

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. அலெக்ஸ் (கோவை) | : | ஐக்கியத்தின் அஸ்திபாரம் |
| சகோ.C.ஜார்ஜ் (வெலிங்டன்) | : | குயவனும் களிமண்ணும் |
| சகோ.ஜான் வில்லியம் (மணவை) | : | ஒரு நதியுண்டு |
| சகோ.ரகுநாதன் | : | வாலிப பிராயம் |
| சகோ.பிரான்சிஸ் பால் (மேட்டுப்பாளையம்): | | தீர்க்கதரிசன உவமை |
| சகோ.நியூலின் (கோவை) | : | தேவனது இருதயத்திற்கு ஏற்ற மனிதன் |

பொதுச்சபை பொருளாளர் சகோ. S.A. டேவிட் (கோவை) அவர்கள் ஆண்டிப்பட்டி சபை ஊழியக்காரியங்கள் குறித்தும் சபை கட்டிடம் கட்ட தேவையான உதவிகளைச் செய்ய முயற்சி செய்வதாகவும் தெரிவித்தார்கள்.

சகோ. கிறிஸ்துதாஸ் மதுரை மூப்பர் அவர்கள் ஆண்டிப்பட்டி சபை வளர்ச்சி குறித்து தெரிவித்தார்கள். மாநாட்டை சிறப்பித்த அனைவருக்கும் நன்றியும் கூறினார்கள்.

பொதுக்காரியதரிசி சகோ. எபிமனோகர் அவர்கள் ஆசீர்வதித்து, ஜெபிக்க மாநாடு நிறைவுற்றது.

*– சகோ. போத்துராஜ். மூப்பர் ஆண்டிப்பட்டி கிளை*
*– சகோ. கிறிஸ்துதாஸ். மதுரை கிளை மூப்பர்*

## நித்திரை அறிவிப்பு – ஆண்டிப்பட்டி

நாள் :27–12–2004 (திங்கள்)

ஆண்டிப்பட்டி வேதமாணவர் சபை அங்கமான சகோதரி. சிந்தாமணி அவர்களின் குமாரத்தி சகோதரி வரலட்சுமி (MA, M.Phil) அவர்கள் வயது 24 கடந்த 27–12–2004 அதிகாலை 1.00மணி அளவில் மூளை காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் வேதமாணவர் விசுவாசத்தில் உறுதியாக இருந்து கடந்த 26–12–2004 ல் ஆண்டிப்பட்டியில் நடைபெற்ற ஒரு நாள் மாநாட்டில் கிறிஸ்துவுக்குள்ளான உடன்படிக்கை செய்து கொள்ள மிக்க ஆவலாக இருந்தார்கள். வாலிப கருத்தரங்கில் ஆர்வமாகப் பங்கு பெற்றவர்கள். இவரது இளமை பருவ நித்திரை ஆண்டிப்பட்டி சபையாருக்கு மிகுந்த வேதனை அளித்துள்ளது. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் கொண்டமநாயக்கன்பட்டி (வேதமாணவர் சபை) கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

*– சகோ. போத்துராஜ். மூப்பர் ஆண்டிப்பட்டி கிளை.*

# 2004–ம் ஆண்டு இறுதி நாட்களில் உலகில் ஏற்பட்ட பேரழிவு "சுனாமி"

2004–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26–ம் நாள் ஞாயிறு காலை 6.28 மணி பெரும் மழை இல்லை, புரட்டி அடிக்கும் புயற்காற்று இல்லை; மக்கள் வசிக்கும் பூமியில் பூகம்பம் இல்லை. ஆனால் காலைப் பொழுதினில் பேரழிவு, ஏன்? எப்படி ?

இந்த நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் மனதை வி ட்டகலாத, மறக்க முடியாத, பயம் நிறைந்த நாள் அந்த டிசம்பர் 26–ம் நாள் காலை வேளையின் சில நிமிடங்கள்.

முதல் செய்தி சென்னை நகரில் கடல் நீர் ஊருக்குள்ளே புகுந்துவிட்டது என்பது தான். பின்னர் தொடர்ந்து தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக கேட்ட செய்திகள் மனித இரத்தத்தை உறைய வைக்கும் செய்திகளாகவே இருந்தன. இந்தப் பேரழிவு எப்படி ஏற்பட்டது?

இந்தோனேஷியாவில் சிமுயெல் தீவில் உள்ள பாசுநாஸரே என்ற ஊருக்கு வடக்கே 42 கீ.மீட்டர் தூரத்தில் கடலுக்கு அடியில் 10கி.மீட்டர் (6 மைல்) ஆழத்தில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு நிலச்சரிவு ஏற்பட்டதும் அதே தூரத்திற்கு கடலுக்கு அடியில் உள்ள நிலப்பகுதி திடீரென மேலே எழும்பியதும் தான் காரணம். இதனால் 800 கி.மீட்டர் ஜெட் விமான வேகத்தில் அலைகள் வந்தன. (நடுக்கடலில் இதன் உயரம் ஒரு மீட்டரேயிருக்கும். ஆனால் கரையை கடக்கும் போது அதன் உயரம் 10 முதல் 30 மீட்டர் உயரம் ) இதனால் கரைகளில் ஒரு மெகா டன் எடையுள்ள ஒரு கோடி அணுகுண்டுகள் வீசப்பட்ட பயங்கர சேதத்தை ஏற்படுத்தின.

இது போன்ற சிறிய அளவில் அழிவுகள் ஜப்பான் நாட்டில் ஏற்பட்டுள்ளதால் இதற்கு அவர்கள் "சுனாமி" என்று பெயரிட்டுள்ளார்கள்.

**TSU** என்றால் அலைகள் **NAMI** என்றால் துறைமுகம்

**TSUNAMI** – துறைமுக அலைகள் என்பதாகும் இந்திய மக்கள் இப்பெயரை அறிவது இதுவே முதல் முறை.

இந்தோனிசியா நாடு அருகில் உள்ள தீவில் கடந்த டிசம்பர் 26–ம் தேதி ஏற்பட்ட இந்த சுனாமி, மூன்றே மணி நேரத்தில் 2200 கி.மீட்டர் தூரத்திலுள்ள தென்னிந்திய கிழக்குக் கடற்கரை பகுதிகளையும், 1800 கி.மீ தூரமுள்ள இலங்கையையும் 7000 கி.மீ தூரம் சென்று கிழக்கு ஆப்பிரிக்க பகுதிகளையும் பிகுந்த சேதத்தை ஏற்படுத்தின. ரிக்டர் அளவில் 9.0 பதிவாயிருக்கும் இந்த சுனாமி மிகவும் பயங்கரமானது. உலக வரலாற்றில் அதிக நீளமான தூரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்திய பூகம்பம் என்று இதை விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

**இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் :**

இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை, அந்தமான் நிக்கோபார் தீவுகள், ஜாவா, சுமத்திர, மலேசியா, மியான்மர், மாலத்தீவுகள், வங்கதேசம், இந்தியா, சோமாலியா, தான்சானியா, கென்யா, சான்சிபார்.

உயிர்த்சேதம் சுமார் 5 லட்சம், பொருட்சேதம் பல லட்சம் கோடி.

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்கள் பாதிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சென்னை, மெரினா, எண்ணூர், காசிமேடு, நாகப்பட்டிணம், கடலூர், கன்னியாகுமரி, மற்றும் பல இடங்கள்

இந்தப் பேரழிவில் தமிழ்நாட்டில் மட்டும் 25,000 க்கும் அதிகமானோர் உயிர் இழந்திருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளையும் , உடமைகளையும், உறவினர்களையும், இழந்திருக்கிறார்கள். மீனவர்கள் பல நூறு மீன் படகுகள், வலைகளை இழந்திருக்கிறார்கள். ஈடு செய்ய முடியாத இழப்பு.

கடவுளின் கோபாக்கினை என்றும் உலக அழிவின் ஆரம்பம் என்றும் பல இனத்தவர்களும் கூறினாலும் இது போன்ற பேரழிவு இனியும் ஏற்படக் கூடாது என்பது எல்லோருடைய பிரார்த்தனை.

# 2005

## அகில உலக மக்கள் வேதமாணவர்களை அறிந்து கொண்ட மைசூர் வேதமாணவர் மாநாடு

நாள் : 2005 பிப் 4,5,6 இடம் : மைசூர்

**"நீதியினிமித்தம் நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீகள். அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்"**
**I பேதுரு 3: 14–17**

கடந்த2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 4,5,6, ஆகிய நாட்களில் மைசூர் வேதமாணவர்களின் 16–வது மாநாடு **Sri.Vardhamanaiah Smaraka Bhavana** மைசூர் என்ற இடத்தில் நடைபெற்றது.

பெங்களூர், மைசூர், மாண்டியா, ஊட்டி, வெலிங்டன், மேட்டுப்பாளையம், கோவை, ஈரோடு, போத்தனூர், சேலம், மதுரை, மணப்பாறை, மங்களூர், வேலூர், அரக்கோணம் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். முதல் இரண்டு நாட்கள் சகோதரர்கள் தேவ செய்திகளை கொடுத்தனர்.

மூன்றாம் நாள் (6–2–2005) ஞாயிறு காலை 6.30 மணிக்கு மைசூரிலிருந்து 15.கீ.மீ தொலைவிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டினம் அருகில் உள்ள காவேரி ஆற்றில் ஞானஸ்நான உடன்படிக்கை செய்ய ஏற்பாடு செய்யபட்டிருந்தது. இரண்டு லாரிகள் மற்றும் மூன்று கார்களில் மாநாட்டிற்கு வந்தவர்களில் சுமார் 150 பேரும், மேல்நாட்டு சகோதர, சகோதரிகள் (அமெரிக்கா) நான்கு பேரும் கலந்து கொண்டனர்.

மைசூர், பெங்களூர், சகோதர சகோதரிகள் 32 பேர் ஞானஸ்நான உடன்படிக்கை செய்து கொண்டனர். இந்நிகழ்ச்சிகளை கண்டு கொண்டிருந்த இந்து சமய அமைப்பை சேர்ந்த சிலர் தங்களது முக்கிய தலைவர்களுக்கு தகவல் அறிவித்து விட்டனர். ஞானஸ்நான காரியங்களை முடித்து யாவரும் அவ்விடம் விட்டு புறப்பட்ட சில நிமிடங்களில் அங்கு வந்தவர்கள் " **இவர்கள் இந்து மக்களை மதம் மாற்ற வந்திருக்கிறார்கள். இவர்களை இப்படியே விடக்கூடாது**" என்று பெரிய சப்தம் போட்டுக் கொண்டு வந்து வாகனங்களை வழிமறித்து அனைவரையும் கீழே இறங்க வைத்தார்கள். அனைவரின் கேமராக்கள், வேத புத்தகங்கள், செல்போன்கள், வீடியோ கேமரா அனைத்தையும் பிடிங்கி நடுரோட்டில் போட்டார்கள். **"வேத புத்தகத்தை தீயிட்டு கொளுத்த வேண்டும்"** என்றும் கூறினார்கள். இது போல அமெரிக்க சகோதரர்களுடைய பொருட்களையும் வாங்கி வைத்துக் கொண்டார்கள். கலவரம் அதிகமானதால் அனைத்து சகோதர சகோதரிகளும், பிள்ளைகளும், ஜெபத்தில் ஈடுபட்டனர்.

ஒருவரும் அவர்களுடன் எதிர்த்து பேசாமல் அமைதியாக, மௌனமாக இருந்தது அவர்களுக்கு மிகுந்த ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. சகோ. M.S. மரியதாஸ் மற்றும் சகோ.சார்லஸ் சுரேஷ் ஆகியோரை **"இவர்கள் வெளிநாட்டு ஆட்களை வரவழைத்து பணம் வாங்கிக் கொண்டு இந்து மக்களை மதம் மாற்றம் செய்யும் கிரிமினல்கள் (Criminals)"** என்றும் பல கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசியும் அவர்களை அடிக்கவும் செய்தனர். **(I பேதுரு 3:16)**

அவர்கள் செய்தி கொடுக்க, சிறிது நேரத்தில் காவல் துறையினரும், தொலைகாட்சி (உதயம்.TV) நிறுவனத்தினரும், செய்தி தொடர்பாளர்களும் வந்து விட்டனர். கலவரத்தை உண்டாக்க வேண்டும் என்றே வந்த இந்து தீவிர அமைப்பாளர்களும், அரசியல்வாதிகளும் ஞானஸ்நானம் பெற்றவர்களின் பெயர்கள் அறிந்து அவர்கள் ஒவ்வொருவரிடமும் **"கிறிஸ்தவ மதம் மாறுவதற்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள்"** என்று கேட்டு துன்புறுத்தினர். அதற்கு தேவ மக்கள் உரிய பதில் கொடுத்தனர். பின்னர் அனைவரையும் கைது செய்யும்படி காவல்துறை அதிகாரியிடம் கூறினார்கள்.

(இச்செயல்கள் காலை 8.30 முதல் 10.00 மணி வரை நடந்தது) காவல் துறையினரும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடந்து விடக்கூடாது என்ற நிலையில் அனைவரையும் ஸ்ரீரங்கப்பட்டனம் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள். மறைத்து வைத்திருந்த செல்போன் மூலமாக மாநாட்டில் உள்ளவர்களுக்கு நடந்து கொண்டிருந்த செய்திகள் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள அனைவரும் கலக்கமடைந்தனர். சகோதரி. மரியதாஸ் அவர்கள் மைசூர் காவல் துறையுடன் தொடர்பு கொண்டு மாநாட்டில் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தார்கள்.

இச்சமயத்தில் செல்போன் மூலமாக சகோ.J. உதயக்குமார் அவர்கள் சென்னையில் உள்ள தனது துணைவி தெல்மாவிடம் அமெரிக்க தூதரகத்தை தொடர்பு கொண்டு இக்காரியங்களை தெரிவிக்கும்படி கூறினார்கள். ஞாயிறு விடுமுறை என்பதால் தொடர்பு கிடைக்கவில்லை என்ற பதில் கிடைத்தது.

காவல் நிலையத்தில் காலை 10.00 மணியிலிருந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்த அனைவரும் காலை,மதிய உணவு இன்றி இருந்தனர். ஒரிரு சகோதரர்கள் அங்குள்ள எதிர்ப்பையும் மீறி தேவ பெலத்துடன் சிறிது தூரம் சென்று பிஸ்கட், பன் போன்ற சிறு ஆகாரங்களை வாங்கி வந்து பகிர்ந்தளித்தனர்.

ஆனால் காவல் துறை அறையில் அமர்ந்திருந்த அமெரிக்க சகோதரர்கள் தண்ணீர் கூட அருந்தாமல் முழு உபவாச நிலையில் (Fasting) இருந்தனர். சற்று தொலைவில் இருந்த இந்து தீவிர அமைப்பாளர்கள் தீய எண்ணத்துடன் சுற்றிக் கொண்டிருந்தனர்.

மதியம் சுமார் 2.00 மணிக்கு EC TV (தொலைக்காட்சி) நிறுவனத்தினர்கள் வந்து மாநாட்டு முக்கியஸ்தரான சகோ. மரியதாஸ் அவர்களிடம் வேதமாணவர்கள் யார் என்பது குறித்தும் அவர்களுக்கும் மற்ற கிறிஸ்தவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்தும் கேள்விகள் பல கேட்டனர். ஒரு மணி நேரம் அதற்குரிய விளக்கமான பதிலை சகோதரர் அவர்கள் கூறினார்கள். (இவை அனைத்தும் TV காமராவில் பதிவு செய்யப்பட்டது ) வேதமாணவர்கள் பற்றிய செய்திகள் வெளியுலக மக்கள் தெரிந்து கொள்ள கிருபை செய்த தேவனுக்கு நன்றி .


மாலை 3.00 மணிக்கு அனைத்து சகோதர சகோதரிகளின் முழு விலாசங்களையும் பாதுகாப்பு கருதி காவல் துறையினர் கேட்டு பெற்றுக் கொண்டனர். மாலை 5.00 மணிக்கு இந்து தீவிர அமைப்பாளர்களிடமிருந்து அனைத்து பொருட்களையும் மீட்டுக் கொடுத்தனர். மாலை 5.30 மணிக்கு அனைவரையும் காவல்துறையினர் தங்களது முழு பாதுகாப்பில் மாநாடு நடைபெறும் இடத்திற்கு ஆபத்து இன்றி அழைத்துச் சென்றனர். காவல் துறையினருக்கு நன்றி.

அனைவரின் வருகையும் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த சகோதர சகோதரிகளுக்கு மிகுந்த மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது. கண்ணீர் மல்க அனைவரையும் வரவேற்றனர். தேவ கிருபையால் அனைவரும் மீட்கப்பட்டதை குறித்து சகோதரர்கள் மரியதாஸ், .மூர்த்தி, .S.A.டேவிட், . O.S.R. கிறிஸ்துதாஸ், J.எபிமனோகரன், J. உதயக்குமார், ஆகியோரும் சகோ.குவின்ஸ்லியும் பேசின பின்பு யெகோவா தேவனுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரத்தையும் , ஜெபத்தையும் ஏறெடுத்து மாநாடு நிறைவு பெற்றது.

**குறிப்பு:** மேற்கண்ட நிகழ்ச்சிகளின் சில காட்சிகள் (கர்நாடகா) உதயா TV யில் ஒளிபரப்பப்பட்டது. மேலும் அங்குள்ள மாலை பதிப்பு செய்திதாளில் **"மதம் மாற்றம் செய்த வேதமாணவ கிறிஸ்தவர்கள் 100 பேர் கைது. மாலையில் விடுதலை"** என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது. இவை வேதமாணவர்களுக்கு செலவு இல்லாத நற்செய்தி.
(தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பிய மைசூர் உதயா TV க்கு நன்றி)

BIBLE STUDENTS NEWSLETTER

Volume 34 / Number 1 / Spring 2005



India brethren traveling by truck from the convention to attend baptism

**At Mysore, India** February 6

**32 Immersed - Followed by Opposition**

*The following is an account of the persecution that our brethren endured and is here detailed thanks to a report submitted by* ***Br.*** *Ernie Kuenz.li who was present.* Ed.

Nearly 200 brethren gathered to attend Mysore's 16th annual convention on Sunday, February 6. Nearly lOOjourneyed from the convention site to theCauvery River for the immersion service at7:30 a.m. Br. Udhaya Kumargave a short ten minute discourse in Tamil on the subject of baptism and 32 brethren from Bangalore, Mysore, Coimbalore and other ecclesias were immersed.

A problem started when approximately ten activists complained that the brethren were converting Hindus to Christianity. Once the trouble began, the Indian brethren hustled the American brethren to their taxi and the Indian sisters and children to the back of the trucks, while the Indian brothers stood outside.

The activist group grew to nearly 40 as others arrived from a nearby village. They confiscated cells phones and a digital video camera, knocked the glasses off of Br. Mariadas, slapped another brother and threatened to hurt them, saying there would be many sacrifices that day.

The police arrived and decided everyone should go with them.At the police station, the brethren were unloaded from the trucks and made to sit under the trees. The taxi was parked behind the station where the American brethren stayed with the windows rolled up and doors locked for 30 minutes until the police thought it was safe and moved them into the station for their protection. The activists followed and resumed their yelling and demands.

During the afternoon, the Hindu activists and a few of the brethren came in to make statements to the police. When all statements had been taken the Hindu activists dispersed and the brethren were escorted by the police back to the convention site. Upon everyone's return, a meal was served-as the friends had gone without food all day- to all who had gone to the immersion. Then Br. Mariadas gathered all the brethren to a service of thanksgiving. Many brethren took turns expressing their thanks and love to the heavenly Father for the experience.

**நித்திரை அறிவிப்பு – கோவை**

கோவை கிளைச்சபையை சேர்ந்த சகோ.ஜேம்ஸ் பாஸ்கர் அவர்களின் தந்தை சகோ.எட்வர்டு அவர்கள் 7.1.2005 அன்று நித்திரையடைந்தார்கள்.

*– சகோ.A.அந்தோணிசாமி மூப்பர் கோவை கிளை.*

**வாலிபர் கருத்தரங்கு – கோவை**

நாள் : 2005 பிப் 11,12,13 இடம் : வேதமாணவர் சபை – கோவை.

சென்னை, திருவொற்றியூர், அயனாவரம், பெங்களூர், திருச்சி, பாலக்கரை, சங்கிலியாண்டபுரம், காட்டூர், மணப்பாறை, மதுரை, சேலம், ஈரோடு, வெலிங்டன், குன்னூர், மேட்டுப்பாளையம், கோவை, ஒண்டிபுதூர், போத்தனூர் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 250 பேர் கலந்து கொண்டனர்.

அங்கு, கேள்வி பதில்கள், கடைசி கால தீர்க்கதரிசனங்கள், பகுத்தறிதல் போன்ற தேவ செய்திகளை கேட்டறிந்தனர். சுமார் 100 வாலிப பிள்ளைகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**ஞானஸ்நான உடன்படிக்கை – கோவை**

நாள் 13.2.2005. இடம் : கோவை

**உடன்படிக்கை செய்து கொண்டவர்:**
சகோதரர்கள்.ஜான் ஜோசப்

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**
சகோ. எபிமனோகரன், உதயக்குமார், சின்னப்பன்

*– வாலிபர் குழு*



**நித்திரை அறிவிப்பு – கோவை**

கோவை கிளைச் சபையைச் சேர்ந்த மூத்த சகோதரர் A.J. தேவ ராஜ் அவர்கள் கடந்த 2.3.2005 அன்று நித்திரையடைந்தார்கள்.

உடன்படிக்கை நாள் : 20.5.1973.

## 2005 84–வது பொது மாநாடு திருச்சிராப்பள்ளி

நாள் :2005 – மே 13–15 இடம் : LKS மஹால் – திருச்சி

| | | |
|---|---|---|
| ஆரம்ப ஜெபம் | : | சகோ. ஜார்ஜ் (குன்னூர்) |
| தலைமை | : | சகோ. எபிமனோகரன் பொதுக்காரியதரிசி |
| வரவேற்பு | : | சகோ. நேசராஜ் (திருச்சி) |

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. ஜெயராஜ் (மணவை) | : | வெளிச்சத்திலே வெளிச்சம் |
| சகோ. வில்லியம் பாக்கியராஜ்(வெலிங்டன்) | : | அடையாளங்கள் |
| சகோ. ரவிக்குமார் (பெங்களூர்) | : | அறுப்பு |
| சகோ. செல்வராஜ் (சென்னை) | : | புது சிருஷ்டியின் சுதந்திரம் |
| சகோ. ஜெபசீலன் (ஈரோடு) | : | கிறிஸ்துவின் பாத அங்கங்கள் |
| சகோ. சின்னப்பன் (மணவை) | : | இனி காலம் செல்லாது |
| சகோ. அலெக்ஸ் பர்ணபா | : | தண்ணீர்த் தொட்டி |

| | | |
|---|---|---|
| சகோ. ரகுநாதன் (சென்னை) | : | இரண்டு விதமான பிரமாணங்கள் |
| சகோ. தேவ கிருபானந்தம் (கோவை) | : | பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் |
| | : | இடைப்பட்ட காலம். |
| சகோ. பாஸ்கரன் (ஈரோடு) | : | துன்பத்தில் களி கூறுதல். |
| சகோ. விக்டர் இமானுயேல் (சென்னை) | : | நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும். |
| சகோ. மரியதாஸ் (மைசூர்) | : | கலக்கப்பட்ட தண்ணீர். |
| சகோ. ஜோசுவா (குன்னூர்) | : | தேவனுடைய இராஜ்யம். |
| சகோ. தினகரன் (மைசூர்) | : | சிலுவையின் நிழல் |
| சகோ. இஸ்ரயேல் (விஜயவாடா) | : | ஏழு முத்திரைகள் |
| சகோ. ராஜ்குமார் (போத்தனூர்) | : | கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன். |
| சகோ. பிரான்ஸிஸ்பால் (மேட்டுப்பாளையம்) | : | 21 நாட்கள் |
| சகோ. உதயகுமார் (சென்னை) | : | பாபிலோனின் சால்வை |
| சகோ. இருதயராஜ் (ஒண்டிபுதூர்) | : | நோவாவின் நாட்களில் நடந்தது போலவே நடக்கும். |
| சகோ. ஜான்சன் (மேட்டுப்பாளையம்) | : | எருசலேம் நமக்கு எச்சரிப்பு |
| சகோ. பிரபாகரன் | : | பரம அழைப்பின் பந்தயப் பொருள். |
| சகோ. நியூலின் ராஜ்குமார் (கோவை) | : | கள்ளத் தீர்க்கத்தரிசிகள். |

நாள் : 15.05.2005 இடம் : காவிரி ஆறு – திருச்சி.

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் :**

| | |
|---|---|
| சகோ.ஜேம்ஸ்ராஜ். S/o.அருள்சாமி | 28 (டால்மியாபுரம்) |
| சகோதரி. மார்கரேட் D/o.ஜேசுதாஸ் | 30 (டால்மியாபுரம்) |
| சகோ. சரவணன் S/o. சுப்பிரமணியன் | 35 (ஈரோடு) |

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:–**

சகோதரர்கள். எபிமனோகரன், சின்னப்பன், உதயக்குமார், ஜெயராஜ்.

மேட்டுப்பாளையம் சகோ. ஜான்சன், சகோதரி சாராள் இவர்களது குழந்தைக்கு **ஆரோன் ஜோசப்** என்றும், ஈரோடு சகோ, பாஸ்கர், சகோதரி எலிசபெத் ராணி இவர்களது குழந்தைக்கு **ரெபேக்காள்** என்றும், அந்தியூர் சகோ. சரவணன், சகோதரி சரோலின் சாந்தி இவர்களது குழந்தைக்கு **ஜெனிஸ்** என்றும்,திருச்சி சகோ. ஜோசுவா, சகோதரி. ஏஞ்சல் இவர்களது குழந்தைக்கு **டெனிஸ்சைரஸ்** என்றும் கிளைச்சபை மூப்பர்களால் பெயர் சூட்டப்பட்டது.

14–05–2005 அன்று இரவு வாலிபர்களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 75 வாலிப பிள்ளைகள் கலந்து கொண்டனர்.

வேதாகம வினா– விடைதேர்வில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு சகோதரர்கள். தேவ கிருபானந்தம், ஜான்டேவிட், விக்டர், ஜான்மனோகரன், ஜான்வில்லியம் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள்.

மாநாட்டில் கோவை, போத்தனூர், குன்னூர், வெலிங்டன், மேட்டுப்பாளையம், ஒண்டிபுதூர், ஈரோடு, சேலம், சென்னை, திருச்சி, மணப்பாறை, மதுரை, ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், லால்குடி, டால்மியாபுரம், மைசூர், பெங்களூர், விஜயவாடா ஆகிய பல்வேறு இடங்களிலிருந்து சுமார் 650 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஒரு நாள் சிறப்பு ஆராதனை

வேதவமாணவர் சபை ஆண்டிப்பட்டி கிளை

நாள் : 19–06–2005 நேரம் : காலை 7.30 – 9.00

**ஞானஸ்நான உடன்படிக்கை** இடம் : வைகை ஆணை ஆண்டிப்பட்டி

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

சகோதரி. ஜோதி 42 க/பெ. கணேசன் (கொண்டமநாயக்கன்பட்டி)

சகோதரி. காமேஷ் 20 த/பெ. கணேசன் "

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**

சகோதரர்கள். பிரான்சிஸ்பால், விக்டர் இமானுயேல் (சென்னை)

நேரம் : காலை 10.00 – 4.30 இடம் : சமுதாயக்கூடம் கொண்டமநாயக்கன்பட்டி(ஆண்டிப்பட்டி)

வரவேற்பு : சகோ. எபிமனோகரன்

ஜெபம் : சகோ. S.A. டேவிட் (கோவை)

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

சகோ. ஜார்ஜ் (வெலிங்டன்) : உங்களை வழிநடத்தினவர்களை நினைத்துப் பாருங்கள். (எபி : 3:7)

சகோ. வில்லியம்ஸ் (வெலிங்டன்) : உற்சாகமாக கொடுத்தல் (II கொரி : 9 : 7)

சகோ. தேவ கிருபானந்தம் (கோவை) : சந்தோசமாயிருங்கள் (பிலிப் : 4 :4)

சகோ. விக்டர் இம்மானுயேல் (சென்னை) : மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ: 3 : 1)

சகோ. பிரான்சிஸ்பால் (மேட்டுப்பாளையம்) : பொருந்தனை (சங்கீ : 66 : 14)

சென்னை திருவொற்றியூர், கோவை, மேட்டுப்பாளையம், வெலிங்டன், மதுரை, ஆண்டிப்பட்டி, பெரியகுளம் ஆகிய இடங்களிலிருந்து சகோதர, சகோதரிகள் பிள்ளைகள் 70 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை திருவொற்றியூர் கிளைச்சபையார் தாங்கள் கொண்டு வந்திருந்த சில அவசியமான பொருட்களை ஆண்டிப்பட்டி சபையாருக்கு அன்பளிப்பாக கொடுத்தார்கள்.

சகோ. எபிமனோகரன் (பொதுக்காரியதரிசி) ஜெபித்து, ஆசீர்வதிக்க ஆராதனை முடிவுற்றது.

–சகோ. O.S.R.கிறிஸ்துதாஸ். ஆண்டிப்பட்டி கிளை செயலாளர்

–சகோ. போத்துராஜ். மூப்பர் ஆண்டிப்பட்டி கிளை

## 2005 – 06 ஆண்டுக்கான பொதுக்குழு நிர்வாகக் கூட்டம் –கோவை

நாள் : 26–06–2005 இடம் :கோவை

ஜெபம் : சகோ. ஜான்சன். போத்தனூர்.

அனைத்து கிளைச் சபைகளிலிருந்தும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.

1. கிளைச் சபை மூப்பர்கள் தங்களது ஊழியங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.
2. திருச்சியில் கடந்த 2005 மே. 13–15 நாட்களில் நடைபெற்ற மாநாட்டு வரவு, செலவு அறிக்கையை சகோ. நேசராஜ் அவர்கள் வாசித்தார்கள். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
3. பொதுசபையின் வரவு செலவு அறிக்கையை பொதுப் பொருளாளர் சகோ. டேவிட் அவர்கள் சமர்ப்பித்தார்கள். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. கிளைச் சபையின் மாத சந்தா விகிதம் (2005 –06) கிளைச்சபை மூப்பர்கள் அறிவித்தார்கள்.

5. சேலம் சபைக் கட்டிடம் குறித்து பேசப்பட்டது. மைசூர் சகோ. மரியதாஸ் அவர்கள் கட்டிட மொத்தக் தொகையான ரூ. 36,000/– த்தில் ரூ. 25,000 கொடுத்து சபைக்கட்டிடத்தை மீட்டுக் கொள்வதாகவும், மீதித் தொகை ரூ. 11,000 த்தை அனைத்து கிளைச் சபைகளும் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

6. 86 வது பொது மாநாடு வருகிற 2006 ஆம் ஆண்டு மேட்டுப்பாளையத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

7. திருமணப்பதிவாளர் வேறு ஒருவரை கூடுதலாக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சகோ. சின்னப்பன் (மணப்பாறை) அவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

8. வாலிபர் கருத்தரங்கு 2006 ஜனவரியில் திருச்சியில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

9. ஆராய்ச்சி கூட்டம் வருகின்ற 2005 ஆகஸ்ட் 14,15 நாட்களில் மேட்டுப்பாளையத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஆராய்ச்சிக்கான பொருள்.
**1. உயிர்த்தெழுதல், 2. சாத்தான் கட்டப்படுதல், 3. ஆயிர வருட அரசாட்சி.**

10. வேதமாணவ ஐக்கிய சபையின் சரித்திரம் 500 புத்தகங்கள் அச்சடிக்க தீர்மானிக்கப்பட்டது.

**84 வது பொது மாநாடு திருச்சி வரவு செலவு விபரம்**

| | |
|---|---|
| பிரண்ட்ஸ் இந்தியா கமிட்டி மூலம் வரவு | 1,30,000 |
| கிளைச்சபைகள் மூலம் வரவு | 39,650 |
| அனுதாபிகள் மூலம் வரவு | 6,700 |
| ஆக மொத்தம் | 1,76,350 |
| மாநாட்டு மொத்த செலவு | 1,97,610.00 |
| பற்றாக்குறை | 21,260.00 |
| மீதிப் பொருட்கள் விற்ற வரவு | 2,302.00 |
| மொத்த பற்றாக்குறை | 18,958.00 |

பற்றாக்குறை பொதுச்சபையிலிருந்து கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**2005 – 07ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள்**

பொதுச் செயலாளர் : சகோ. எபிமனோகரன் (கோவை)

உதவிச்செயலாளர் : சகோ. தேவ கிருபானந்தம்

பொதுப் பொருளாளர் : சகோ. டேவிட்

மற்றும் கிளைச் சபை மூப்பர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்

முடிவு ஜெபம் : சகோ. ஜெயராஜ் (குன்னூர்)

*–பொதுச்செயலாளர் கோவை*

**நித்திரை அறிவிப்பு – கோவை**

கோவை சகோ.ஜேம்ஸ் தனபால் அவர்களின் தந்தை சகோ.துரைசாமி அவர்கள் 5.8.2005 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நித்திரையடைந்தார்கள். 6–8–2005 ஆம் நாள் கோவை சுங்கம் சி.எஸ்.ஐ. கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

*– சகோ.A.அந்தோணிசாமி . கோவை*

**செப். 2005 வேதாகம ஆராய்ச்சிக்கூட்டம் – மேட்டுப்பாளையம்**

நாள் : 14, 15.8.2005. இடம் : அன்னபூரணா ஹால், மேட்டுப்பாளையம்,

26.06.2005 அன்று கோவையில் நடைபெற்ற பொதுக்குழு நிர்வாகக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி ஆராய்ச்சி கூட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்றது.

**ஆராய்ச்சிக்கான பொருள்:**

1. உயிர்த்தெழுதல் 2. சாத்தான் கட்டப்படுதல் 3, ஆயிரவருட அரசாட்சி

**தூது கொடுத்தவர்கள்:**

சகோதரர்கள். ரவிக்குமார் (பெங்களூர்), ஜேக்கப் (கோவை), சின்னப்பன் (மணவை), விக்டர் (சென்னை), இருதயராஜ் (ஒண்டிபுதூர்), பிரபாகரன் (ஈரோடு), மரியதாஸ் (மைசூர்), தினகரன் (மைசூர்), ஜார்ஜ் (வெலிங்டன்),

இவர்கள் தங்களது ஆராய்ச்சியின் மூலம் தெரிவித்த தேவ செய்திகளின் தொகுப்பு நமது பத்திரிக்கையில் (செப். 2005) வெளியிடப்பட்டுள்ளது, முழுவதும் வாசித்து அறிந்து கொள்வது நல்லது.

அனைத்து கிளைச்சபை மூப்பர்களும் கலந்து கொண்டார்கள்.

மேற்படி ஏற்பாட்டை மேட்டுப்பாளையம் சகோ. பிரான்சிஸ்பால், அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

செப். 2005 மாதப்பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள தொகுப்புரை வேதமாணவர்களிடையே சர்ச்சைக்குரிய சந்தேகங்களை வெளிப்படுத்துகின்றன என்றும் மைசூர் சகோதரர்கள். மரியதாஸ், தினகரன் ஆகியோரது ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்ட கி.பி. 2043–ல் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி ஸ்தாபிக்கப்படும் என்ற கருத்தும் ஒரு ஆராய்ச்சி தான் என்றும் இவைகள் வேதமாணவ ஐக்கிய சங்கத்தின் தீர்மானங்கள் அல்லவென்றும் நவம். 2005 பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

**இரண்டு நாட்கள் பொதுக்கூட்டம் – கோத்தகிரி**

நாள் : 2005 செப். 25, 26 இடம் : கோத்தகிரி

மேட்டுப்பாளையம், கோவை, ஒண்டிபுதூர், ஊட்டி ஆகிய இடங்களிலிருந்து அநேகர் கலந்து கொண்டனர்.

*–சகோ.D.ஜெயராஜ், மூப்பர்.*

**ஞானஸ்நான உடன்படிக்கையும் ஒரு நாள் மாநாடும் – மணப்பாறை**

நாள் : 2.10.2005. இடம் : சகோ. சின்னப்பன் அவர்களது இல்லம். மணப்பாறை

ஆரம்ப ஜெபம் : சகோ. O.S.R. கிறிஸ்துதாஸ், மதுரை

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

| | |
|---|---|
| சகோ. J. உதயகுமார் (சென்னை) | : கர்த்தருக்குக் காத்திருத்தல் |
| சகோ. R. செல்வராஜ் (சென்னை) | : புதிய சிருஷ்டியின் சத்துருக்களும், தாக்குதல்களும் |
| சகோ. J. ஜோசப் (திருச்சி) | : நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ |

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. A. ஜான்சன் | 36 | த/பெ. சகோ. அருள்ராஜ். (திருச்சி சங்கிலியாண்டபுரம்) |
| சகோதரி. J. ஜான்சி | 30 | க/பெ. சகோ. ஜான்சன் (திருச்சி சங்கிலியாண்டபுரம்) |
| சகோதரி. L. ஆன்டனி ரோஸ்லின் | 25 | த/பெ. சகோ. லூர்து ஆரோக்கியராஜ் ” |
| சகோதரி. R. ஆனந்தி | 23 | க/பெ. V. ராமு (நுங்கம்பாக்கம், சென்னை) |
| சகோ. V. ராமு | 22 | த/பெ. வாசு (நுங்கம்பாக்கம், சென்னை) |

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**
சகோ. J. உதயக்குமார், S. சின்னப்பன்

நன்றி அறிவிப்பு : சகோ. துரை மனோகரன், மணவை.

முடிவு ஜெபம் : சகோ. V. ஜேக்கப், கோவை,

சென்னை, அயனாவரம், திருவொற்றியூர், சேலம், ஆத்தூர், திருச்சி, மதுரை, ஆண்டிப்பட்டி, வெலிங்டன், கோவை, ஒண்டிபுதூர், திண்டுக்கல் ஆகிய இடங்களிலிருந்து அநேகர் கலந்து கொண்டனர்.

*– சகோ.S. சின்னப்பன், மூப்பர்.*

**ஞானஸ்நான உடன்படிக்கை – கோத்தகிரி**

நாள் : 4.11.2005 இடம் : குஞ்சப்பன் ஆறு. கோத்தகிரி

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. செல்லையா | 47 | கோத்தகிரி |
| சகோ. சிவசண்முகம் | 27 | கோத்தகிரி |
| சகோ. சதீஷ் | 24 | கோத்தகிரி |

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**
சகோ. எபிமனோகர், D. ஜெயராஜ், சங்கர் (குன்னூர்)

*– சகோ.D.ஜெயராஜ், மூப்பர்,*

**ஜெபக்கூடம் திறப்பு விழாவும், மாநாடும் – சேலம்,**

நாள் : 18.12.2005 இடம் : ராமமூர்த்தி புதூர், சேலம்

தலைமை : சகோ. எபிமனோகர்

சென்னை சகோ. R.செல்வராஜ் அவர்கள் ஜெபித்து ஜெபக்கூடத்தை திறந்து வைத்தார்கள். மைசூர் சகோ. மரியதாஸ் அவர்கள் தலைமையேற்று விழாவை நடத்தினார்கள். சேலம் சபை வளர்ச்சி குறித்து குன்னூர் சகோ. ஜார்ஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

விழா துவக்க ஜெபம் : சகோ. நேசராஜ் (திருச்சி)
விழா முடிவு ஜெபம் : சகோ. இருதயராஜ் (ஒண்டிபுதூர்)

மாநாடு நாள் : 18.12.2005 இடம் : வாய்க்கால் பட்டறை, ராஜசேகர் திருமண மண்டபம், சேலம்.

ஆரம்ப ஜெபம்: சகோ. வில்லியம்ஸ் (வெலிங்டன்)

அநேக வருடங்கள் சேலம் சபைக்கு ஊழியம் செய்த பெங்களூர் சகோதரி. ரேச்சல்பிலிப்ஸ் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

மணவை சகோ. சின்னப்பன் அவர்களும் மைசூர் சகோ. தினகரன் அவர்களும் தேவ செய்தி அளித்தார்கள், ஜெபக்கூடம் கட்ட பொருள் உதவி செய்த மைசூர் சகோ. மரியதாஸ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சென்னை, மணவை, திருச்சி, சேலம், கோவை, ஈரோடு, ஆண்டிப்பட்டி, பெங்களூர், மைசூர், ஊட்டி, ஒண்டிப்புதூர் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 150 பேர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்,

நன்றி அறிவிப்பு : சகோ. பாண்டியன் (உதவி மூப்பர்)

முடிவு ஜெபம் : சகோ. டேவிட் (கோவை)

*– சகோ. சேகர், மூப்பர்,*

**ஞானஸ்நான உடன்படிக்கையும் ஒரு நாள் மாநாடும் – பொத்தமேட்டுப்பட்டி**

நாள் : 25.12.2005. இடம் : ஜெயராஜ் தோட்டம், மணவை.

தலைமை : சகோ. எபிமனோகர்

ஜெபம் : சகோ. கே.பி. ஆரோக்கியசாமி (டால்மியாபுரம்)

வேதவாசிப்பு : சங்கீதம் 133. சகோ, ஜெ. காட்வின் இம்மானுயேல்

வரவேற்பு : சகோ. ஜெயராஜ், மூப்பர்

**தேவ செய்தி கொடுத்தவர்கள்:**

சகோ. காலின்ஸ் (பெங்களூர்) : சங்கீதம் 23: 1–6

சகோ. வில்லியம்ஸ் (வெலிங்டன்) : மறைவான மன்னா

சகோ. உதயகுமார் (சென்னை) : பட்டயத்தை எடுத்துக்கொள்,

சகோ. செல்வராஜ் (சென்னை) : ஜீவ ஒட்டப்பந்தயம்

சகோ. நேசராஜ் (திருச்சி) : ஆசரிப்புக்கூடார மகிமை

சகோ. பிரான்சிஸ்பால் (மேட்டுப்பாளையம்): எலிசா செய்த அற்புதம்

**உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்:**

| | | |
|---|---|---|
| சகோ. ஆரோக்கியதாஸ் (எ) பாலு | 35 | த/பெ. கே. ஜெயராஜ். (தேனூர்) |
| சகோதரி. பாத்திமா மேரி | 32 | க/பெ. ஆரோக்கியதாஸ் (தேனூர்) |
| சகோதரி. டோரா | 23 | க/பெ. I.A. ஜேக்கப் (டால்மியாபுரம்) |

**உடன்படிக்கை செய்து வைத்தவர்கள்:**

சகோ. எபிமனோகர், ஜெயராஜ், சகாயராஜ்

மாநாட்டில் சுமார் 240 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

*– சகோ. A. ஜெயராஜ், மூப்பர்.*

**2005 ஆம் ஆண்டு மாதப்பத்திரிக்கையில் தொடர் தேவ செய்தி**
**"ஆசரிப்பு கூடாரம்" வினா– விடை**


# Bible Students Association of India
## 4th Bi-Annual Youth Convention
**Coimbatore, South India** **January 14-16, 2003**



## Bible Students Ecclesia, Orlando, Florida.



## 2004 மே7–9, 83வது பொது மாநாடு சென்னை



## வேதாகம புத்தகங்களை எழுதியவர்கள், இடங்கள், காலங்கள்.

| Sl.No | Name of the Book | Author | Place of writing | Completed in the year |
|---|---|---|---|---|
| 1. | Genesis | Moses | Widerness | 1513 |
| 2. | Exodus | Moses | Widerness | 1512 |
| 3. | Leviticus | Moses | Widerness | 1512 |
| 4. | Numbers | Moses | Plains of Moab | 1473 |
| 5. | Deuteronomy | Moses | Moab | 1473 |
| 6. | Joshua | Joshua | Canaan | C 1450 |
| 7. | Judges | Samuel | Israel | C 1100 |
| 8. | Ruth | Samuel | Israel | C 1090 |
| 9. | 1 Samuel | Samuel ,Gad, Nathan | Isreal | C 1078 |
| 10. | 2 Samuel | Gad, Nathan | Isreal | C 1040 |
| 11. | 1 Kings | Jeremiah | Judah & Egypt | 580 |
| 12. | 2 Kings | Jeremiah | Judah & Egypt | 580 |
| 13. | 1 Chronicles | Ezra | Jerusalem? | 1 roll |
| 14. | 2 Chronicles | Ezra | Jerusalem? | C 460 |
| 15. | Erza | Ezra | Jerusalem | C 460 |
| 16. | Nehemiah | Nehemiah | Jersalem | A 443 |
| 17. | Esther | Mordecai | ShushanElam | C 475 |
| 18. | Job | Moses | Widerness | C 1473 |
| 19. | Psalms | David &others | - | C 460 |
| 20. | Proverbs | Solomon; | Agur. Jerusalem | C 716 |
| 21. | Ecclesiastes | Solomon | Jerusalem | B 1000 |
| 22. | Song of Solomon | Solomon | Jerusalem | C 1020 |
| 23. | Isaiah | Isaiah | Jerusalem | A 732 |
| 24. | Jeramiah | Jeremiah | Judah & Egypt | 580 |
| 25. | Lamentations | Jeremiah | Near Jerusalem | 607 |
| 26. | Ezekiel | Ezekiel | Babylon | C 591 |
| 27. | Daniel | Daniel | Babylon | C 536 |
| 28. | Hosea | Hosea | Samaria Dist | A 745 |
| 29. | Joel | Joel | Judah | C 820 ? |
| 30. | Amos | Amos | Judah | C 804 |
| 31. | Obadiah | Obadiah | | C 607 |
| 32. | Jonah | Jonah | | C 844 |
| 33. | Micah | Micah | Judah | B 717 |

| | | | | |
|---|---|---|---|---|
| 34. | Nahum | Nahum | Judah | B 632 |
| 35. | Habakkuk | Habakkuk | Judah | C 628? |
| 36. | Zepheniah | Zepheniah | Judah | B 648 |
| 37. | Haggai | Haggai | Jerusalem rebuilt | 520 |
| 38. | Zechariah | Zechariah | Jerusalem rebuilt | 518 |
| 39. | Malachi | Malachi | Jerusalem rebuilt | A 443 |
| 40. | Matthew | Matthew | Palestine | C 41 |
| 41. | Mark | Mark | Rome | C 60 - 65 |
| 42. | Luke | Luke | Caesarea | C 56-58 |
| 43. | John | John | Ephesus or near | C 98 |
| 44. | Acts | Luke | Rome | C 61 |
| 45. | Romans | Paul | Corinth | C 56 |
| 46. | 1 Corinthians | Paul | Ephesus | C 55 |
| 47. | 2 Corinthians | Paul | Macedonia | C 55 |
| 48. | Galatians | Paul | Corinth or | |
| | | | Syr.Antioch | C 50-52 |
| 49. | Ephesians | Paul | Rome | C 60-61 |
| 50. | Philippians | Paul | Rome | C 60-61 |
| 51. | Colossians | Paul | Rome | C 60 -61 |
| 52. | 1 Thessalonians | Paul | Corinth | C 51 |
| 53. | 2 Thessalonians | Paul | Corinth | C 51 |
| 54. | 1 Timothy | Paul | Macedonia | C 61-64 |
| 55. | 2 Timothy | Paul | Rome | C 65 |
| 56. | Titus | Paul | Macedonia? | C 61-64 |
| 57. | Philemon | Paul | Rome | C 60-61 |
| 58. | Hebrews | Paul? | Rome | C 61 |
| 59. | James | James | Jerusalem | B 62 |
| 60. | 1 Peter | Peter | Babylon | C 62-64 |
| 61. | 2 Peter | Peter | Babylon? | C64 |
| 62. | 1 John | John | Ephesus or near | C 98 |
| 63. | 2 John | John | Ephesus or near | C 98 |
| 64. | 3 John | John | Ephesus or near | C 98 |
| 65. | Jude | Jude | Palestine? | C 65 |
| 66. | Revelation | John | Patmos | C 96 |

**பின் குறிப்பு :**


A - Means - " After "
B - Means - " Before "
C - Means - " About "

## சென்னை கிளைச்சபை நிகழ்ச்சிகள்

### 01-01-1994






### சேலம் கிளைச்சபை 20–04–1997





### 15-08-2000




## (மதுரை) ஆண்டிப்பட்டி கிளைச்சபை நிகழ்ச்சிகள்

### 29-12-1996






### 25-09-1999









### 26-12-1999












## (மதுரை) ஆண்டிப்பட்டி கிளைச்சபை நிகழ்ச்சிகள்

### 14-04-2002








### 2001 – மே 13, 80–வது பொது மாநாடு – கோவை





### 2003 – மே 11, 82–வது பொது மாநாடு – கோவை




## 2002 மே 10–12, 81 வது பொது மாநாடு திருச்சி நிகழ்ச்சிகள்
























## ஊட்டி கிளைச்சபை நிகழ்ச்சிகள் 2003 செப் 19–21













## மேட்டுப்பாளையம் கிளைச்சபை நிகழ்ச்சிகள் 2004 மார்ச் 28












## ஈரோடு கிளைச்சபை நிகழ்ச்சி




## 2004 செப் ,3,4,5 ஈரோடு கிளைச்சபை நிகழ்ச்சிகள்









## 2003 ஜனவரி 14–15 கோவையில் நடைபெற்ற வாலிபர் கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரண்ட்ஸ் இந்தியா கமிட்டி தலைவர் சகோ. எர்னி குயின்ஸ்லி மற்றும் துணைவியார்.






## 2005 மே, 13–15 திருச்சியில் நடைபெற்ற
## 84வது பொது மாநாட்டு நிகழ்ச்சிகள்












## 2005 மே13–15, 84வது பொது மாநாடு திருச்சி














# முடிவுரை

அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே,

முடிவுரை என்பது இப்புத்தகத்திற்கான முடிவே தவிர வேதமாணவர் சரித்திரத்தின் முடிவல்ல. கர்த்தருக்குச் சித்தமானால் பதிமூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அதாவது வேதமாணவர் சபையின் நூற்றாண்டு நிறைவு ஆண்டில் (2018–19) இச்சரித்திரத்தின் அடுத்த தொடர் வெளியிடப்படும். பின்வரும் சந்ததியார் இப்பணியை நிறைவேற்றுவார்கள்.

கிறிஸ்து என்ற ஒளியைக் காணும்படி கண்களைத் திறந்தவர் நமது மூத்த சகோதரர். ரஸல் அவர்கள். இந்த தீபமானது பலவிதமான காற்றினால் அணைந்துவிடாமல் பாதுகாப்பது நம் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமையாகும்.

சகோதரர் ரஸல் அவர்கள் தனது கடைசி நாட்களில் தன்னோடிருந்தவர்களிடம், **"என்னுடன் மிக நெருக்கமாயிருங்கள், எந்த இடத்தில் என் சிந்தனைகளின் நூலைத் தவற விடுகிறேனோ, அதை உடனே எடுத்துக் கொள்ளத் தயாராயிருங்கள்"** என்றார்.

அதைப்போல நாம் சரித்திரம் படிப்போராக மட்டுமின்றி விட்ட இடத்திலிருந்து தேவ சித்தப்படி சரித்திரம் படைப்போராயிருந்து, உலகிற்கு ஒளி வீசுவோம்.

– ஆசிரியர். சகோ. **O.S.R. கிறிஸ்துதாஸ்**